தென்மொழி

நிலைப்பதற்கு என்ன செய்துவிட்டோம்?

ஆயிரத்தின் மேலொருநா றாண்டுசென்ற
    பின்னர்தான், அறச்செல்வர், அறிவின்மேதை,
வாயுரத்தின் பெரும்புலவர், வற்றாத
    அறிவூற்று, உயிர்ப்பாறு, தமிழினத்தின்
பாயிரத்தைப் பாடிவைத்த முதல்தலைவர்
    வல்லதிரு வள்ளுவர்என் பேராசான்
ஏயபெயர் மக்களிடைத் தெரிந்ததெனில்
    இளம்புலவர் புகழ்தேடி அலைதல் ஏனோ?

என்னெழுதி விட்டோம்நாம்? என்னசெய்து
    விட்டோம் நாம்? ஈகமென்ன ஆற்றிவிட்டோம்?
முன்னிருந்த அவர்களெல்லாம் மொழியாத
    எக்கருத்தை—எவ்வறிவை—முழங்கிவிட்டோம்?
தின்னுதற்கே அலைகின்றோம்; உடுப்பதற்குப்
    பணிகின்றோம்; திரிகின்றோம்; மனைவிமக்கள்
மன்னுதற்குப் பெரும்பொருளைச் சேர்க்கின்றோம்;
    மறைந்தபின்னும் நிலைப்பதற்கென் செய்து-
                                        விட்டோம்?

சிலநூல்கள் எழுதிப்பே ரறிஞரெனச்
    சிலுப்புகின்றோம்; ஆட்சியரை மண்டியிட்டு
நலவளங்கள் துய்க்கின்றோம்; இனம் காட்டிக்
    கொடுக்கின்றோம்; உள்ளுக்குள் நாறுகின்றோம்!
குலநலன்கள் மறைமுகமாய்ப் பேசுகின்றோம்;
    குழுக்கள்பல சேர்க்கின்றோம்; கொள்ளைகொண்டு
நிலபுலன்கள் வாங்குகின்றோம்; பெருமைபெறத்
    துடிக்கின்றோம்! நிலைப்பதற்கென் செய்து-
                                        விட்டோம்?

சுவடி : 26
ஓலை : 10

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
உருபா : 3-00

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

○ : *1511:* பாவலரேறு (தமிழரேறு) அவர்கட்கு எனது முதல் வணக்கம். எந்து பெயர் (ஸ்ரீதரன்) திருதரன். நான் பாண்டியன் போக்குவரத்துக் கழகத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் இரண்டாமாண்டு படித்து வருகிறேன். நான் நாளும் திருக்குறள் படித்து வருவது வழக்கம். அதுபோல் திருவள்ளுவர் படத்தை வணங்கிவிட்டுத்தான் பயிற்சிப் பள்ளிக்குச் செல்வேன். என்னையறியாமலேயே எனக்குள் தமிழன் என்ற உணர்வு மேலோங்கி நிற்பதாக அறிகிறேன்... தமிழன் தாழ்ந்து கொண்டுதான் இருக்கிறான். பார்ப்பனன் ஆண்டு கொண்டுதான் இருக்கிறான். அதற்காக இப்படிக் குறைப்பட்டுக்கொண்டே போனால் தீர்வு காண முடியாது என்பதை உணர்ந்து இருளாக உள்ளது என்று சொல்வதை விட அதில் ஒரு விளக்கேற்றி வைக்க ஆசைப்படுகிறேன். இருந்தும் என்ன பயன்? நானும் 'தனி மரம் காடாதல் இல்லை' என்பதை உணர்ந்து துவண்டு கிடந்தேன். அப்பொழுதுநான் தங்களது தென்மொழி என்ற தமிழினத்தைத் தட்டியெழுப்பும் போர்வாள் என் மதியைக் குத்தியது. தமிழனுக்காக நீங்கள் செய்யும் தொண்டினை நினைத்துப் பார்த்தேன்; அப்படியே கண்ணீர் வந்துவிட்டது. இதில் அதியமான் எழுதிய 'பாரதி தேசியப் பாவலரா? இல்லை பார்ப்பனியத்தைக் காத்த பாவலர்; என்பதை அறிந்துகொண்டேன். இதைப் படித்தபின்பு என் வீட்டிலிருந்த எனது நண்பன் அன்பளிப்பாகக் கொடுத்த 'பாரதியார் கவிதைகள்' நூல் அடுத்த நிமையமே தீக்கிரையானது. இதைப் பார்த்தபொழுது பார்ப்பன வேதமும் ஒருநாள் இப்படிக் கருகும் காலம் தொலைவில் இல்லை என்பதை உணர்ந்து நான் மகிழ்வுற்றேன். தங்களது தனித்தமிழ்த் தேசியக் கொள்கை என்னை மிகவும் கவர்ந்தது. அதன் மூலம்தான் தமிழன் தலை நிமிர முடியும் என்பதை நான் உணர்ந்தேன். எனவே நானும் தங்களுடன் இந்தத் தனித்தமிழ்த் தேசியநீரோட்டத்தில் கலந்துகொள்ள ஆவன செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். உண்மையுள்ள — க. திருவாணன் (சிறிதரன்), மதுரை-6.

○ : *1512:* மானமிகு தமிழ் இனக் காவலர் ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம். தங்களின் 'தமிழீழம்' படித்தேன் ஒவ்வொரு கட்டுரையிலும் தங்களின் கூரிய சிந்தனைத் தெளிவும், நெஞ்சுரமும், பத்தாண்டுகளுக்கு முன்பே தமிழீழத்தின் பாதை இப்படித்தான் போகுமென்ற தங்களின் கணிப்பும் தென்படுகின்றன. கட்டுரைகளில் வீரம் செறிந்த ஒவ்வொரு சொல்லையும் படிக்கும்போது, உடம்பின் ஒவ்வொரு மயிர்க்காலும் நெட்டுயிர்த்து நிற்கின்றது. வியப்பையும் மெய்சிலிர்ப்பையும் தரும் 'தமிழீழ' நூலை ஒவ்வொரு தமிழனும் படித்துணர்ந்து, தெளிவு பெற்றால் தமிழீழ விடுதலைக்குத் தமிழகத்திலேயே இன்னொரு புலிப்படை உருவாகும் என்பது திண்ணம்.

ஆதலால், வரலாற்றுச் சிறப்புமிக்க தங்களின் கருத்துக் கருவூலங்களைத் தவறவிடக் கூடாது என்ற எண்ணத்தில் தங்களின் சிந்தனையில் உழைப்பினில் உருவான நூல்களை வாங்கிட முடிவு

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே"

[திருவளம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை நாம் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26] தி.பி. உ0உச —சுறவம் (திசம்-சன 93) (ஓலை: 10]

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி-11

'பாசம், நேசம், தவம், பாரம், தாரம், தூரம் போன்ற நூற்றுக்கணக்கான தூய செந்தமிழ்ச் சொற்களை வட மொழிச் சொற்களின் திரிபுகளென்று ஆரியர் ஏமாற்றி' வந்ததாக அருளி குறிப்பிடுகிறார்.
நூல்: —(இவை தமிழல்ல-பக்:21.)

பெரும்பான்மை சமற்கிருதச் சொற்களுக்கு வேரும் அடியும் தமிழ்மொழியே என்பதை அறுதியிட்டு உறுதியாக உரைப்பதோடு, அத்தகைய ஓரிரு சொற்களை அவர் விண்டும் விளக்கியும் காட்டும் வல்லமை அறிந்து வியந்து போற்றுதற்குரியது.

சான்றாக, சமற்கிருதச் சொற்கள் என்று கூறப் பெறுகின்ற தீரம், தீரன், தைரியம், ஸ்திரம் ஆகிய நான்கு சொற்களுக்கும் கருவும் வேரும் தமிழ்மொழியிலேயே உள்ளன என்று கூறி, அவர் அவற்றை விளக்குந் திறன் கண்டு மகிழ்தற்குரியது.

(நூல்: 'இவை தமிழல்ல' (பக்: 6)

துல்— (பொருந்துதல் கருத்துடைய தமிழ் வேர்ச் சொல்);
துல்— துலம் =ஒப்பு. துல்—துலை = ஒப்பு.
துல்+இயம் = தல்லியம் = ஒப்பு, இணை.
துல்லியம் > துல்ய (Tulya) (சமற்)—equal to, like

பிறமொழிகளில் இத்தமிழ்ச் சொல்லின் திரிபுகள்.

பாலி — துல்ய, துலிய; இந்தி — துல்
பிராகிருதம் — துல்ல; சிந்தி — துலு
பஞ்சாபி — துல். பழைய அவதி — துல
ஒரியா — துலா, துலாஅ;— (equal, like)
மராத்தி — துல் சிங்களம் — துல்
துலா — equal, comparable
துல் — துன — துன்னு = பொருந்து, செறி.
துன்னல் — தையல். 'துன்னல் சிதாஅர்' (பொருந. 81).
துன்னம்— தையல். 'இழை வந்தபல் துன்னத்து' (புறம்136).
துன்னம் — துன்ன (சமற்) (Tunnavaya — tailor)
பாலி — துன்ன. பிராகுதம் — துன்னிய — darned
சிந்தி — துன்னனு — to darn, துனு — darning
நேபாளி — துன்னு ஒரியா — துன்னிபா.

துல் — துள் — துண் — துணை = சேர்க்கை, ஒத்தல்.
துணை — துணைவு—துணைவன் = கணவன். துணைவி — மனைவி
துல் — துள் — திள்—திளை = நெருங்கு, கூடு, செறி.
திளைத்தல் — நெருங்குதல், பொருதல்.
திள்—திண் + மை — திண்மை = திணுக்கம், உறுதி, வலிமை;
திண் + அம் — திண்ணம் = உறுதி, நித்தியம், நிச்சயம், இறுக்கம்.
திண்ணறிவு — வலிய அறிவு
திண் — திண்ணன் = வலியவன்; திண்ணியர் — உறுதியானவர்;
திணி — செறி. திணிதல் — செறிதல், இறுகுதல், வலிதல்,
திண் —திண்ணை — திண்ணிய திண்டு.(திண் + து திண்டு.)

திள் + பு — திட்பு+அம் —திட்பம், நெருக்கம், செறிவு, உறுதி;
திள் + து — திட்டு (ஒ. நோ: வல் + து — வட்டு, கள் + து — கட்டு)
திட்டு — திண்ணிய மண்மேடு, ஆற்றிடைக்குறை, சிறு குன்று.
திட்டு — திட்டாணி — மரத்தைச் சூழக் கட்டப்பெற்ற மேடை;
திட்டு — திட்டை — மண்மேடு, மேடு.
ஒ. நோ: வார் மணல் அகல் திட்டை; (பட்டினப்:60)

திட்டையிடுதல் —பல்லீறு தடித்தல்; (யாழ்ப்பாண வழக்கு)
திட்டு + அம் — திட்டம் — உறுதிப்பாடு, வலிவு, கட்டமைப்பு;
திட்டு — திடு (ஒ. நோ: வட்டு — வடு; விட்டு —விடு).
திடு — திடல் — திண்ணிய மண்வெளி, அரங்க வெளி
திடல் — திடர் — உறுதி, வலி.
திடர் — திடர்ர்—திடாரி—வலியவன்(யாழ்ப்பாண வழக்கு)

Scanned with CamScanner

திடாரி + இகம் — திடாரிகம் — திடாரிக்கம் — வலிமை.
திடு + அம் — திடம் — செறிவு, திணிவு, உறுதி, நிலை வலிமை, — ஆற்றல். டகர தகரங்கள், ரகர றகரங்களாகத் திரி-பேற்பதானது மொழியியற்பட்ட ஒலியியலில் பரவலான நேர்வு உடையதாகும்.

திடம் — திரம் — திறம் என்றவாறு திரிந்து செறிவு, வலிமை, ஆற்றல் போலும் கருத்து நிலைகளை வளர விட்டுக் கொண்டு வளர் வெய்தியதும், இத்தகுபோங்கு முறையிலேயேயாகும்.

தமிழ்ச் சொற்களினின்று, சமற்கிருதம் தான் திரிபுறுத்திக் கடன் கொண்ட அமைப்புகளில் ரகர இனவொலி நுழைப்பும் ஒரு பாங்கினதாகும்.

ஒ. நோ: படி — ப்ரதி; மெது — ம்ருது; மதங்கம் — ம்ருதங்க; தோணி — த்ரோணி; பவளம் — ப்ரவாள; நடம் — நருத்த — இவ்வகைப் போங்கிலேயே திடம் என்னும் செந்தமிழ்ச் சொல்லை, சமற்கிருதம் திடம் — த்ருத என்றவாறு திரித்-தேற்றது.

திடம் — (Skt) drdha — firm, hard, strong.
பிற வடபால் மொழிகளில் இச் சொல்லின் திரிபுகளாவன:

Prakrit : dhittha.
Bashgali : dit.
Panjabi : dhith(a)
Kumauni : dhito, dheet
Maithili : dhith, dirhai
Marathi : dhiti, dhith.
Kalasha : didha
Old Awadhi : didha
Kashmiri : drethum — (to become hard)

திடம் என்னும் தமிழ்ச் சொல்லின் சமற்கிருதத் திரிபின் வேறுபுடை:

திடம் — (Skt) Dridha = hard, Strong, Violent, mighty.
பயன்படுத்தங்கள்: Dridha — Kantaka — hard thorned
Dridha — Kanda — strong stemmed
Dridha — taru — strong tree.
Dridha — Dhawns — having strong bow
Dridha — Phala — having hard fruilt the cocoa — nut tree.
Dridha — rashtra — திட அரசன்.
Dridha — Kara — strengthening.

Drida என்னும் திரிசொல்லின் கொடுந்திரிபுகள்:
(Skt) Dridha > Dhrishta — bold, audacious
Dhrishta — buddhi — bold minded
Dhrishta — vadin — speaking boldly
Dhrishtatva — boldness, courage
Dhrishti — Bold

திடம் ▷ திரம் > திறம் — உறுதி, திண்ணிலை, வலிமை, ஆற்றல், வீறு

திறம் > திறன் — வினையாற்றல், செயலாற்றல், வலிமை.

திறல் — வலி, ஆற்றல்.

(ஒ.நோ) 'அருந்திறல் கடவுள் வாழ்த்தி.'—பெரும்பாண்:391

'கடுந்திறல் வேனில்' —பெரும்பாண்; 8:

நச்.உரை: கடுந்திறல் — கடிய வலிமையுடைய.

திறவோர் — வலியவர். (ஒ.நோ) தறவோர் (புறம்: 221:4)

திறம் > (Skt) sthira = firm, hard, strong, mighty

பிற வடபால் மொழிகளில் இச் சொல்லின் பசுமைத் திரிபுகள்:

Pali ; thira   Prakrit : thira.   epali: Nthiro.
Panjabi : thir.   Kumauni : thiro.   Bengali: thira
Maithili: thir   Bhoj puri: thir.   Old Awadhi: thira.

திறம் என்னும் சொல் சமற்கிருதத்தில் முதலுயிர் நீட்டமாக வேறு புடையில் ஒலிப்புற்று பயன்பாடு கொண்டது.

திறம் > (Skt) Dhira — firm, brave, energetic, courageous.

பிற வழக்குகள்: Dhira — skandha — strong shouldered
Dhir — skilfull, wise

'தைரியம்' என்னும் சமற்கிருத வடிவம் இம் மேற்கண்ட தமிழ் வழித் திரிபுச் சொல்லினின்றே ஆக்கப் பெற்றதாகும்.

Dhira — (Skt) Dhairya — courage firmness

சமற்கிருத ஆக்க நெறியில், இகர ஈகாரங்கள், ஐகார ஒலி வடிவெய்துவது இயல்பு.

ஒ.நோ: (Skt) citra —caitra
Vidya — vaidya
Vibhava — vaibhava,

இவை மேலும் விரிக்கின் பெருகும். ஆக, தீரம், தீரன், தைரியம், ஸ்திரம் ஆகிய சமற்கிருத வடிவுகளின் மூலமாகவும் அடியாகவும், திடம், திறம் ஆகிய செந்தமிழ்ச் சொற்களே உள்ளன. இன்னவாறே ஏனைய பெரும்பான்மையும் உள.

—'இவை தமிழல்ல' பக் 6-8.

இத்தகைய ஆய்வு நிலையை ஒருவர் எடுத்த எடுப்பிலேயே எய்திவிட முடியாது. பொதுவாகச் சொல்வதானால் உலகின் கண் உள்ள மிகப் பெரும் வழக்குள்ள சிறந்தமொழி ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடல். அவற்றுள் நம் அருந்தமிழ் மொழியோ அகல ஆழங் காணுதற்கரிய மிக மிகப் பெருங்கடல். இதில் மூழ்கிச் சொல்லாய்வு செய்வதென்றால் பெரும் பெரும் அறிஞர்க்கே அரிதாகும் செயலாகும் அது. அதன் பின்னர், வேறு உலகப் பெரு மொழிகளையும் ஆய்ந்து அவற்றோடு நற் தமிழையும் ஒப்பவைத்து அதன் சிறப்பு நிலைகளைக் காண்பதென்பது மிக அரிதினும் அரிதாகும். இவ்வளவு பெரும் பணியை நினைத்தாலே

மலைப்பூட்டும் செயற்கரிய செயலை—இவ் விளம் அகவையிலேயே ஒருவர் விரும்பி ஏற்பதென்றால், அஃது இயற்கையிலேயே, அஃதாவது பிறவியிலேயே வாய்த்த உள்ளுணர்வின்—உயிரியலின் அடிப் படையிலேயே விளங்கித் தோன்றிய—திறப்பாடு என்றுதான் கூறுதல் வேண்டும். ஏனெனில் இம் முயற்சிக்கு முதலில் மன ஊக்கம் தோன்றுதல் வேண்டும்; அடுத்து, அதற்குரிய அளவில் நுண்ணிய அறிவுணர்வு இயற்கையிலேயே கால் கொண்டிருத்தல் வேண்டும்; அதற்கடுத்து இவ்வறிவு உழைப்பிற்கேற்ற வகையில் உழைப்புத் தர உடலும் ஒத்துழைத்தல் வேண்டும். அந்த வகை-யில் தம்மைத் தகுதியுடையவராக்கிக் கொண்டாலும் போதாது; தம் சூழலையும், அஃதாவது குடும்ப நிலைகள், வாழ்வியல் நிலை-களையும் அதற்கேற்ப இணைவுள்ள தாக்கிக் கொள்ளும் இயங்கு-திறன் வேண்டும். இல்லெனில் "என் சூழல் சரியில்லை; நான் என் செய்வது" என்று பொதுவில் ஒரு குற்றச்சாட்டைக் கூறவேண்டி-யிருக்கும். இப்படித்தான் அறிவுத் துறையில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோர் கை நழுவிக் கொள்கின்றனர்.

ஆனால் நம் அருளியார் அவ்வாறெல்லாம் இன்றித் தொடக்-கத்திலிருந்தே அறிவு முயற்சியுடையவராகவும், தமிழை ஆழமாகக் கற்பதில் அசைவிலா ஊக்கமும் உள்ளுணர்வும் உடையவராக இருந்து வந்திருக்கின்றார். இது, அவர் தமிழைப் பற்றிக் கொண்-டிருக்கும் கொள்கை நிலையினின்று தெரிய வருகிறது; அது தொடர்பான அவரின் கருத்துகளைக் கவனியுங்கள்:

"(தமிழில் உள்ள) சொற்களின் வடிவங்களே அவற்றின் முந்தியன்ற தொல் பழங்காலப் பண்பாட்டு நிலைகளையும் விளக்கு-கின்றன. தமிழ் ஓர் இயற்கை மொழியாகப் பல்லாயிரமாண்டு-களாக வளர்ச்சியுற்று வந்திருக்கின்ற உண்மைகள் சொல்-லமைப்புகளிலேயே துலங்க ஒலிக்கின்றன: இதன் இயல் பொழுங்குகள் படிநிலை வளர்ச்சிகள் பிறமொழிகளில் கட்டாய-மாக இவ் வண்ணங் காணவியலாதன."

"இத் தமிழ் சொற்கள்—உலக மக்களின் கருத்துப் பரிமாற்-றங்களுக்கெனக் கொடுத்திருக்கின்ற கொடை மிகப் பெரியது; மிகப் பரந்தது; மிக நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த வரலாற்றையும் உடையது";

நூல்: 'பெற்றோரைப் பற்றி': முன்னுரை;

அவரின் ஆய்வுக் கூர்மைப்பாடு பற்றி ஒரு விளக்கம்.

'அம்மா' என்னும் தொன்தமிழ்ச் சொல் உலக மொழிகளில் சென்று வழங்குவது பற்றி அவர் குறிப்பிடுகையில், அது,

மலையாளம், கன்னடம், குடகு, துளு, தெலுங்கு, கொலாமி நாய்க்கி, பிராகுவி—முதலிய திராவிட மொழிகளிலும்,

கொரியன், மஞ்சு, பாசுக்கு, மலாய், தலைங் போலும் அல்-லிந்திய, ஆத்திரோ—நேசிய மொழிகளிலும்,

சகாய், பலாவுங், தாரங், வா, சன், என், தை—லோய், தாறு, இன் (அல்)ரியாங், காமுக், வார், முண்டாரி, கூர்கு, கரியா—முதலிய ஆத்திரோ—ஆசிய மொழிகளிலும்,

சீனத்தின் மாண்டரின், கண்ட்டோனீசு, கியாமி, சியாமீசு, லூ, குன், சான், ஆகோம், காம்பி, அன்னுமீசு—முதலிய சீனத்திய மொழிகளிலும்,

பவூ, பவூ பேசின், பவூ மவுல்மின், தவுங்கோவ், இசுகா, பூவி, வேவாவ், காரென்பியூ, காரென்னி, சின்குமாமாபாக்க, கேகோ, பாடாவுங், எயின்பா, மானே, சயீன், மோப்வா—பிலிச்சி, மோப்வா தெர்முகா—முதலிய கரென மொழிகளிலும்,

மண், மன்—பா—பன் ஆகிய மன் மொழிகளிலும்,

திபெத்திய—பர்மிய மொழிகளின் பிரிவுகளாகிய இமையஞ்சார் மொழிகளாகிய—கனௌரி, திமால், தாமி, இலிம்பு, யாகா, காப்பு, பாகிங், பலாலி, சங்பாங், லோகேரோங், லாம்பிசோங், வாலிங், சிங்தாங், ருங்சென்புங், துங்கமாலி, ரோடோங் (அல்) சாம்ப்லிங், நாச்சரெங், கூலுங், தூலுங், தூமி, ராய்(அல்) சிம்தார், வாயு (அல்) ஹாயா, கூருங், முர்மி, சுன்வார், மாகரி, நேவாரி, பாடி, பஃறி(அல்)பஃகி, ரோங் (அல்) லெப்ச்சா, டாப்லா—முதலிய மொழிகளிலும்,

சிஃகியா, லோலோ—நி, அஃகி, லோ லோ பூ, ஆ—கா, ஆ—கோ, லிசு, லிசா(அல்)யாயின், மோசோ, நுங்—முதலிய லோலோ—மோசோத் தொகுதி மொழிகளிலும்,

முன்யாக், தக்பா, ஹவ்ர்பா, போட்டிய, திபெத்தன், பால்டி, ஆப் பூரிக், லடாக்கி, ஆப் ஸ்பிட்டி, காகேட், சர்ப்பா, டஞ்சோங்கா—முதலிய திபெத்திய தொகுதி மொழிகளிலும்,

போடோ(அல்)பாரா, லாலுங், கோச், திபுரா—முதலிய பாராத் தொகுதி மொழிகளிலும்.

மெய்டெய்; அன்டுரோ, கடு, லாசி (அல்) லெச்சி, மாரு, புன், சமோங், பர்மீசு, அரக்கனீசு, தவுங்யோ, தானு, தோவோயான், அராபிக்—முதலிய குகி—சின், லுய், பர்மிய, செமித்தியத் தொகுதி மொழிகளிலும்,

இந்திய—ஐரோப்பிய, ஆரியத்—துணைக் குடும்பங்கள், ஈரானியக் கிளைகள் ஆகிய ஒர்முரி, கீழ்முக்ரனி முதலிய மொழிகளிலும், தார்த்திய அல்லது பைசாசக் கிளைகளான சினு, கில்கிட்டி, சிலாசி, ரம்பானி, மையா—முதலிய மொழிகளிலும்,

இந்தோ—ஆரியக் கிளைகளாகிய, பிராகிருதம், கெட்ராளி' லஃண்டா, முல்டானி, ஹந்கி, தலி, தான்னி, திணௌளி திணௌளி (உப்பு வளாகம்) போட்வாரி, புஞ்சி, சிந்தி, (விச்சோலி) லாரி, காச்சி, நாக்புரி, சிங்களம், ஒரியா, பீகாரி, மைதிலி, மாகதி, போஜ்புரி (வடக்கு) போஜ்புரி(தெற்கு) நாக்புரி, பெங்காலி, சிரிபுரியா கச்சார், சிட்டகாங், சக்மா, அவதி, இந்துத்தானி, கொச்சை இந்துத்தானி, தக்னி, பங்காரு, பிரஞ் பாகரீ,

(தொடரும்)

• சென்னைக்கு வர அணியமாகுங்கள்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நான்கு நூல்கள் வெளியீட்டு விழா!

பாவலரேறு அவர்களின் அறுபானாண்டு நிறைவு நாளான, வரும் 10-3-93 அன்று சென்னையில், அவரின் அரிய படைப்புகள் ஆகிய கீழ்வரும் நான்கு நூல்கள் வெளியிடப் பெறும்.
(இடம் பின்னர் தெரிவிக்கப்பெறும்)

1. திருக்குறள் மெய்ப்பொருள்
   உரைச் சுருக்கம்—(முதல் பகுதி)

2. பெருஞ்சித்திரனார் கட்டுரைகள்
   இளமை விடியல்—(முதல் தொகுதி)

3. தனித்தமிழ் இயக்கத் தோற்றமும்
   வளர்ச்சி வரலாறும்!

4. நெருப்பாற்றில் எதிர் நீச்சல்!
   (புரட்சிப் பாடல்கள்)

- நான்கு நூல்களையும் அறிஞர்கள் நால்வர் வெளியிடுவர். அறிஞர்கள் பலர் திறனாய்வு செய்து உரையாற்றுவர்.

- நூல்கள் வரலாற்றில் இஃதொரு பொன்னாள்!

- திருக்குறளில் மூடியிருந்த மதவியல், மூடநம்பிக்கை, அறியாமை, பொருள் தவறு ஆகிய மேகங்களும் பனி மூட்டங்களும் அகன்று, தமிழியல் அறத்தை நிலைநாட்டித் திருக்குறளுக்கு ஒளியேற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்!

- வந்து கலந்து கொள்ளத் தவறாதீர்கள்!

சிறப்பு மடல்கள்!

பல்கலைக் கழகங்கள் மதித்து ஏற்கலாம்!

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு.

உடுமலைப்பேட்டை, ப. அறவாழியின் வணக்கங்கள். தங்களுடைய 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' மாதிரி-2-உம் கண்டேன். பள்ளிப் பாடங்களில் தொடங்கிப் பல்கலைக் கழகப் பாடப் பொத்தகங்கள் வரை, திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையே திணிக்கப்படுவதால், எம்போலும் தமிழாசிரியன்மார் மாணவர்கட்குக் கற்பிக்கும்போது இடர்ப்படுவதுண்டு. தங்களுடைய மாதிரி உரைகளே எங்களைத் தூக்கி நிறுத்துகின்றன, ஐயா! பெரியார் தொண்டர்களும் படிக்க வேண்டிய— மயக்கறுக்கும் உரைகள்!

நான் சந்தித்துக் கலந்துரையாடும் இன—மொழி நல விரும்பிகள் இவ்வுரைகளைப் படிப்பாராயின், இரண்டாம் முறை பிறந்த திருவள்ளுவரென்றும், வாழும் பெரியாரென்றும் தங்களைப் பற்றி நான் கூறியவை மெய்யானவை என்றே உணர்வர்.

''புலவர் தேர்விற்குக் கண்ட கண்ட பாடத் திட்டங்களைப் பல்கலைக் கழகங்கள் தந்து, அதில் தேறுவோர்க்கே புலவர் பட்டம் தருவதை விடுத்துக் குறளும் உரையும் முற்றுகக் கற்றுத் தேரின் புலவர் பட்டம் தரலாம்'' என்று தாங்கள் முன்பு சொன்னதைத் தங்கள் மெய்ப்பொருளுரையினைப் படித்த பின்னராவது, தங்கள் கருத்தினைப் பல்கலைக் கழகங்கள் மதித்து ஏற்கலாம்.

என்றும் தங்கள்—ப. அறவாழி, தமிழாசிரியர், ஆனையூர், அவநாசி.

தமிழ்க் கடல் அருளியைத் தரங்கெட்டுப் பேசுவதா?

அன்புள்ள ஐயா:

பெரியார் சொல்வார், 'எனக்கு நல்ல பிள்ளையாக இருந்து அரசில் வேலை வாங்கியபிறகு, பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாக மாறி 'பிரமோசன்' வாங்கிக் கொள்ளுகிறான்கள்' என்று. இதே போல அரங்கநாயகன் தமிழன் சீட்டில் மந்திரியாகிப் பார்ப்பானை நக்கிப் 'பிரமோசன்' வாங்க முயல்கிறார். அதன் முன்னோட்டம் தான் தமிழ்க்கடல் அருளியை தரங்கெட்டுப் பேசித் திரிவது. வரவர அரங்கநாயகம் ரங்கநாயகம் ஆகி ரெங்க பாஷ்ய அய்யர் ஆனாலும் அதிர்வதற்கொன்றுமில்லை. அன்புள்ள

—வே. தமிழ்மாறன், அம்மன்புரம்.

திருத்திப் படிக்கவும்!

இவ்விதழ் பக்கம்: 14-இன் கடைசி இரண்டு வரிகளில் உள்ள எழுத்துகள், அச்சிடும் பொழுது, விழுந்துவிட்டிருக்கின்றன. அவ் வரிகளைக் கீழ் வருமாறு சரி செய்து கொண்டு படிக்கவும்:

○ : 1519 : பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். ஐயா, கடலூர் மணிமாறன் அவர்களும் நானும் தங்களை நேரில் பார்த்த-

---

Scanned with CamScanner

உலக மா கொடியன் இட்லர் ஓர் ஆரியன்!

முன்னுரை : உலகில் இதுவரை பிறந்த கொடியவர்களுள், இட்லரைப் போல் ஒரு மா கொடியன் இருந்ததில்லை. அவன் செர்மனியின் அனைத்ததிகாரி(சர்வாதிகாரி) ஆனான். அவன் நாட்டில் இருந்த யூத மக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்றான்; கூட்டம் கூட்டமாகத் தீ வைத்துக் கொளுத்தினான்.

ஆரிய இனத்தைச் சேர்ந்த அவன் "உலகிலேயே உயர்ந்தது ஆரிய இனந்தான், அவ்வினத்தார்க்கே மற்ற இனத்தார்கள் அடிபணியவேண்டும். ஆரிய இனத்தவரே உலகெங்கும் ஆட்சி செய்யவேண்டும்" என்று உலக மக்களுக்கே கொள்கை அறிவிப்புக் கொடுத்தான். அவனைப் பற்றியும் அவன் யூதர்களை அழித்த வகை பற்றியும் இங்கு ஓரளவு சுருக்க விளக்கமாகச் செய்திகள் தரப் பெறுகின்றன. 'ஈழ சுதந்திரன்' என்னும் இதழில் சூன், சூலை இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளைச் சுருக்கி மாணவர்களுக்காக இங்கே தருகிறோம். படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

குறிப்பாக நாம் அறிய வேண்டியது, அந்த இட்லரின் ஆரியப் பரம்பரைதான் இப்பொழுது இந்தியாவையும் ஆண்டுகொண்டுள்ளது. அவர்கள் மனநிலையில் இட்லரைப் போன்றவர்களே! ஆனாலும், இந்தியாவில் பழந்தமிழ் இனத்துடன் கலந்து, கடந்த மூவாயிரம் நான்காயிரம் ஆண்டுகள் ஓரளவு பண்பாடு, நாகரிகத்தில் உயர்ந்ததால் அவர்களின் புறநிலை ஓரளவு சீர்மை அடைந்தாலும், அவர்களுடைய செயற்பாடுகள், வஞ்சகங்கள், ஏமாற்றுகள்,வல்லதிகார வெறிகள் இவற்றை அவர்கள் இன்னும் விட்டு விடவில்லை என்பதை மறைந்த இந்திராகாந்தி, இராசீவ் வெறியர் ஆகியவர்களின் அரசியல் நடைமுறைகளிலிருந்தும், இன்று தமிழகத்தை ஆண்டுவரும் செயலலிதாவின் ஆட்சியதிகார வெறிகளிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

இந்த மனப்பாங்குடன் இட்லரைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுங்கள். இட்லர் மேற்கு ஆரிய இனத்தைச் சார்ந்தவன். இங்கிருக்கும் இந்திரா, இராசீவ், செயலலிதா ஆகியோர் கிழக்கு ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் ஐரோப்பாவில் பரவினர். இவர்கள் இந்தியாவில், மேற்கு ஆசியாவில் (ஈரான், ஈராக் முதலிய பகுதிகளில்)பரவினர். இன்றைய உருசியரும் ஈரானியரும் ஆரியரே! ஈராக்கு குடியரசுத் தலைவர் சதாம் உசேன் ஓர் ஆரிய எதிர்ப்பாளர். அவர் ஈரானியரை எதிர்த்ததாலேயே, ஐரோப்பாவும் அமெரிக்காவும் பிற நாடுகளும் சேர்ந்து அவரை எதிர்த்தன என்பது பலருக்கும் தெரியாது.)

முதல் உலகப் போர் முடிவடைந்து வெர்செய்ல்சு உடன்படிக்கையினால் செர்மனி ஒரு குடியரசானது. அதே நேரத்தில், அந்த உடன்படிக்கையினால் செர்மானியரின் தன் உணர்வுகள் விழித்துக் கொண்டன. செர்மானியப் படைவீரர்களின் தற்-

பெருமையும் ஆணவமும், குறிப்பாக அடால்ஃப் இட்லரின் தற்பெருமையும் ஆணவமும் வளர்ந்தன. நாள்கள் செல்லச் செல்ல செர்மானிய அரசின் மதிப்பையும் பெருமையையும் காக்கும் மிகத்திறமை வாய்ந்த 'நாசி'(Nazi) என்ற இயக்கத்தின் தலைவரானார் இட்லர்.

நாசி இயக்கக் கொள்கைகளின்படி பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் குறைத்துப் பொறுப்பான ஒரு தலைவரின் கீழ் நடக்கும் நேரடித் தேர்தல் மூலம் ஆட்சி நடத்தப்படவேண்டும். இம்முறையில் அரசியலமைப்புச் சட்டமோ, எதிர்க்கட்சியோ கிடையாது. அரசு அமைக்கப்பட்டுவிட்டபின், ஓர் ஆட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டபின், அவருக்கு எதிராகவோ, ஆட்சிக்கு எதிராகவோ அல்லது ஆட்சியைப் பிடிக்கவோ எந்த முயற்சியும் யாரும் எடுக்கக் கூடாது. நாட்டுத் தலைவருக்கு எவ்வகையிலும் கீழ்ப்படியாமை என்பது இருக்கக் கூடாது. 'ஏரன்வாக்' என்று ஆரிய இனத்தைச் சார்ந்த இந்த செருமானியர்கள்தாம் மற்ற இனத்தவர்களைவிட உயர்ந்தவர்கள் என்றும் சட்டம் இயற்றப்படல் வேண்டும்.

1933 சனவரி 30-ஆம் நாள் செர்மானியக் குடியரசுத் தலைவர் இண்டன்பர்க், இட்லரைத் தலைமையமைச்சராக அமர்த்தினார். இரண்டு நாள்களில் இட்லர் பாராளுமன்ற முறையையே மாற்றி விட்டார். மார்ச்சு 6-இல் தேர்தல்கள் நடைபெற்றன. மார்ச்சு 21 இல் புதிய பாராளுமன்றத்தின் துவக்கவிழா நடைபெற்றது. அப்பொழுதே இட்லருக்கு எதிராக யார் செயல்பட்டாலும் அவர்கள் தூக்கியெறிப்படுவார்கள் என்ற உண்மையை அனைவரும் உணர்ந்து கொண்டனர். மார்ச்சு 23-அன்று பாராளுமன்றத்தில் அதிக இடங்களை இட்லர் பெற்றதால், உடனே முழுப் பொறுப்பும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் பாராளுமன்றத்தின் ஒப்புதலை அவர் பெறத் தேவையில்லை என்ற சூழ்நிலையும் ஏற்பட்டுவிட்டது. (இந்த நிலையை இன்றைய தமிழ்நாட்டு அரசியலோடும் முதலமைச்சர் செயலலிதாவோடும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

ஏப்பிரல் 1-ஆம் நாள் யூத மக்களின் எந்த ஒரு பொருளையும் செர்மானியர் வாங்கக் கூடாது என இட்லர் அறிவிப்புச் செய்தார். யூத மக்கள் செர்மானியர்களின் கொடுமைகளுக்கு ஆளானார்கள். வீதிகளில் 'யூதர்கள் ஒழிக' 'யூதர்கள் ஒழிக' எனக் கருவிகள் தாங்கிய நாசி போர்வீரர்கள் முழக்கமிட்டுக் கொண்டு சென்றனர். அவர்கள் அவ்வாறு போகும் பொழுது, வழியில் கண்ட யூதர்களையெல்லாம் அடித்துத் துன்புறுத்தி, அவர்களின் உடைமைகளையும் சூறையாடினர். ''உண்மையான ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் செர்மானியர்' என்றும், 'அதனால் அவர்களே அனைவரையும்விட உயர்ந்தவர்கள்' என்றும் அறிவிப்புச் செய்தனர்.

"யூதர்கள் செர்மானியரோடு கலப்பதால், செர்மானியரின் உடலில் ஓடும் அரத்தத்தில் கறை படிந்துள்ளது; மேலும் வலிமைமிக்க செர்மானிய இனத்தை வலிமையற்ற யூதர்களிடமிருந்து காத்துக் கொள்ளவேண்டும்; கிறித்துக் 'கொள்வதோடு மட்டும் நின்றுவிடாமல், தங்களது எதிரிகளான இவர்களைக் கொன்றும் விடவேண்டும்'' என அறிவிப்புச் செய்தனர்.

ஏப்பிரல் 7, 1933 அன்று உயர்ந்த முகாமைப் பதவிகளில் இருந்து வநீத யூதர்கள் தங்களது அரசப் பதவிகளிலிருந்து தூக்கியெறியப்பட்டனர். குறுகிய காலத்தில் நாசி இயக்கத்தினர் தங்களுக்கென 'கெசுடப்போ' என்ற ஒரு காவல் படையையே உருவாக்கி விட்டனர். இப் படையில் யூதர்களின் கலப்பற்ற தூய்மையான செர்மானியர்கள் மட்டுமே தங்கள் பணியை ஆற்றினார்கள். அப்போது 'கெசுடப்போ' என்ற காவல் படையின் தலைவரான இட்லர் இப்படையின் முகாமையான குறிக்கோளை விளக்கினார்.

''செர்மானியர்கள் ஐரோப்பியர் அனைவரையும்விட உயர்ந்தவர்கள் என உலகம் உள்ளவரை அனைவரையும் ஒப்புக் கொள்ளச் செய்வதே நமது குறிக்கோள்'' என்றார்.

கெசுடப்போ படையிலுள்ள ஒருவன் மணம் புரிவதற்குமுன், தான் மணக்கவிருக்கும் பெண், தான் 1800 ஆண்டுகளுக்கும் முந்திய ஆரிய வழியில் வந்தவள் என மெய்ப்பிக்கவேண்டும். மேலும் உடல் நிறம் மருத்துவ ஆய்வுகட்கு உட்பட்டு 'ஏரன் வாக்' என்ற இனத்தவள்தான் தான் எனவும் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

குதிரைகள் கருத்தரிப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் குதிரைப் பண்ணையைப் போன்ற ஓர் இடம் அமைக்கப்பட்டுத் தூய்மையான கலப்பற்ற ஆரிய இனத்தைச் சார்ந்த பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 'கெசுடப்போ' ஆட்களுடன் உடலுறவு கொண்டு, குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்காக மட்டும் பயன்படுத்தப்பட்டார்கள். இவர்களிடம் பிறந்த குழந்தைகள் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவர்கள். மேலும் அவர்களின் கல்வி மற்றும் பிற செலவுகளை அரசே ஏற்றுக் கொண்டது. ஏறக்குறைய 50,000(ஐம்பதாயிரம்) குழந்தைகள் இவ்வாறாக உருவாயின. யூதர்களை இட்லர் வெறுக்கும் செய்தியை அனைவருக்கும் தன்னுடைய நடவடிக்கைகள் மூலம் தெளிவாக்கினார்.

15 பிப்ரவரி 1934 அன்று கெசுடப்போ படையினர் செர்மனியிலுள்ள யூதர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை அணியம் செய்தனர். 1935 செப்டம்பர் மாதம் செர்மன் பாராளுமன்றம் நியூரம்பர்க்கில் கூட்டப்பட்டது.

அக் கூட்டம் யூதர்கள் எவ்வாறு கொலை செய்யப்பட வேண்டும் என்பதை விளக்கம் செய்வதற்காகக் கூட்டப்பெற்றதாகும். அக் கூட்டத்தில் இட்லர் யூதர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

"யூதர்கள் தந்நலத்தின் மறு உருவம்; யூதர்கள் 'பேய் பிடித்தவர்கள்; முட்டாள்கள். நாம் யூதர்கள் இல்லாவிட்டாலும் உயிர் வாழலாம். ஆனால் நாம் இல்லாமல் அவர்களால் உயிர் வாழமுடியாது":

இதைத் தொடர்ந்து, மிக விரைவில் செர்மனியரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. மேலும், யூதர்களோடு திருமண உறவுகள் ஏற்படுத்தப்படுவதையும் தடை செய்தனர்.

கெசுடப்போ காவல் படையில் ஒரு பிரிவு ஐரோப்பா முழுவதும் உள்ள யூதர்களைத் தீர்த்துக்கட்ட ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவுக்கு இட்லரின் முழுநம்பிக்கைக்குரிய அடால்ஃப் ஈச்மேன் தலைவராக அமர்த்தப்பட்டார். இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நாசி இயக்கத்தினர் யூதர்களைக் கொலை செய்யவும், கொள்ளை அடிக்கவும் தொடங்கினர். கோளயரிங் என்ற நாசி இயக்கத்தின் அமைச்சர்களில் ஒருவர் 1938 நவம்பர் மாதத்தில் யூதர்கள் ஒரு பில்லியன் (10 இலக்கம்) மார்க்குகள் (செருமன் நாணயம்) தண்டமாகச் செலுத்தவேண்டும் எனவும் அறிக்கை விடுத்தார். நாசி இயக்கத்தின் நெறிமுறைகளின்படி, தாக்கம் அடைந்தவர்கள் தாம் தண்டம் செலுத்த வேண்டும்.

1939-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இட்லர் போலந்து நாட்டைத் தாக்கவே இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.

போலந்து நாட்டைக் கவர்வது மட்டும் அவருடைய எண்ணமன்று. மாறாக, போலந்து நாட்டில் ஓர் யூதனும் இல்லாதவாறு கொல்லப்படவேண்டும் என்று தன் படைத் தலைவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். எனவே, போலந்திலும் பல பாசறைகள் அமைக்கப்பட்டன.

ஆசுவிட்சு என்ற இடத்தில் 12 முதல் 14 அகவை வரையுள்ள யூதக் குழந்தைகளும் சிறுவர்களும் கொடுமைப்படுத்தப்பட்டனர்; 50 அகவைக்கு மேற்பட்ட அனைவரும் தொடர் வண்டிகளில் ஏற்றிவரப்பட்டு நச்சுவளிக்குப் பலியாக்கப்பட்டார்கள்; வேலை செய்யத் திறமையுள்ளவர்கள் அனைவரும் கடுமையான வேலைகளுக்குள்ளாக்கப்பட்டார்கள். மற்றவர்கள் நச்சுவளியினால் சாகடிக்கப்பட்டார்கள். கடுமையான வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களும் இறுதியில் நச்சுவளிக்குப் பலியிடப்பட்டார்கள்.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்

பெருஞ்சித்திரனார் திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம்

'பெருஞ்சித்திரனார் திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம்' — நூல் சிறப்பாக எழுதப் பெற்று வருகிறது.

நூலின் பெயர் 'உரைச் சுருக்கம்' என்பதாக இருப்பினும், மாதிரி உரைகளைப் படித்த அன்பர்கள் பலரும் கேட்டுக் கொண்டதற்கேற்ப, உரை சிறிது விரிவாகவே எழுதப் பெற்று வருவதால், நாம் முன்பு நினைத்தபடி 500 பக்கங்களில் முழுநூலும் அமையாமல் இரண்டு அல்லது மூன்று பங்கு நீளும் போல் தெரிகிறது. எனவே நூல் சில பகுதிகளாகவே வெளிவரும் என்றும் தெரிய வருகிறது. எப்படியும் நூலின் முதல் பகுதி, முன்பு குறிப்பிட்டவாறு, 10-3-1993 இல், ஆசிரியரின் அறுபானாண்டு நிறைவு நாளில், விழா ஒன்றில் வெளியிட ஏற்பாடு செய்யப் பெற்று வருகிறது.

நூல் அச்சுப் பதிப்பு உயர்ந்த வெள்ளைத்தாளில்; கதிர் அச்சு (லேசர்) அமைப்பு முறையில், நல்ல கட்டடத்துடன் மிகவும் அழகாக, நெடுங்காலம் வைத்துப் பேணப்படுவதற்கேற்ப, வெளிக் கொணரத் திட்டமிட்டு, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. முதல் பகுதி ஏறத்தாழ ஐநூறு பக்கங்களும், விலை உருபா ஐம்பது அளவிலும் அல்லது மேலும் இருக்கலாம் என்று கருதப் பெறுகிறது.

இந்த நூலைத் தென்மொழி அன்பர்கள், நம் இயக்க அன்பர்கள் அனைவரும் கட்டாயம் வாங்கிப் படிக்க வேண்டுவதுடன், அவரவர்களுக்குத் தெரிந்த பிற தமிழன்பர்கள், திருக்குறள் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவர்கள் அனைவரையும் வாங்கச் செய்யவும் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்; ஏனெனில் அப்பொழுதுதான், திருக்குறளில் பரிமேலழகர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் பிறர் வழியாக ஏற்பட்டுள்ள, கறைகள், கசண்டுகள், ஆரியவியல் கூறுகள், பிழைகள், மயக்கங்கள், சூழ்ச்சிகள், கீழிறக்கங்கள், திசைமாற்றுகள், கீழ்மைகள், இழிவுகள், பெண்ணடிமைத்தனங்கள், மதவியற் சேறுகள், மூடநம்பிக்கைகள், மற்றும் பார்ப்பனீயக் கோட்பாடுகள் முதலியனவற்றை அவர்கள் கண்டு கொள்ளவும், அவற்றைத் தவிர்த்து, நம் அரிய, பெரிய மிகச் சிறந்த, இன நல, வாழ்வு நல, அறநல, இலக்கியமாகிய திருக்குறளின் உண்மையான வடிவத்தை அவர்கள் உணரவும் முடியும்.

இன்றைய நிலையில், திருக்குறளுக்கு நிறைய உரையாசிரியர்களும், திறனாய்வாளர்களும், விரிவுரையாளர்களும், சொற்பொழிவாளர்களும், வணிக நோக்கினர்களும், கவனகர்களும் மிகுந்த எண்ணிக்கையில் உருவாகியுள்ளனரே தவிர, உண்மையான திருக்குறள் அன்பர்களோ; அறிஞர்களோ பின்பற்றுளர்-

களோ சிறு அளவிலும் கூட உருவாகவில்லை—என்பது மிகவும் உண்மையாகும். ஆகவே, திருக்குறளினால் நம் மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும், கலை, பண்பாட்டிற்கும் ஏற்பட வேண்டிய முழுப்பயனும் இன்னும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் வெளிவரவிருக்கும் 'பெருஞ்சித்திரனார் மெய்ப் பொருளுரை' மிகவும் விரைவாகவும், பரவலாகவும் தமிழர்கள் ஒவ்வொருவர் கைக்கும் சென்று சேர்ந்தால்தான், நம் அருந்தமிழ் மொழிக்கும், இனத்திற்கும், நாட்டிற்கும் நாம் நினைக்கின்ற—திட்டமிட்டிருக்கின்ற—உண்மையான— தொண்டைச் செய்யமுடியும்; விளைவுகளை உருவாக்கவும் முடியும்.

எனவே, அன்பர்கள் திருக்குறள் உரைக்குத் தோராயமாக மதிப்பிட்டுள்ள விலை உரு. 50 ஐ முன்கூட்டியே அனுப்பி வைத்தால், நூல்கள் நம் செலவிலேயே அனுப்பி வைக்கப் பெறும் என்று கூறிக் கொள்வதுடன், அவ்வாறு மற்றவர்களையும் அனுப்பி வைக்கச் செய்யவும் வேண்டிக் கொள்கிறோம். இது வணிக நோக்கமான வேண்டுகோள் அன்று; மக்கள் பயன் பெற வேண்டும் என்னும் நோக்கில் விடுக்கப் பெறும் வேண்டுகை என்க.

தென்மொழி, சென்னை 5. அமைச்சர்.

(அட்டை 3-ஆம் பக்கம் தொடர்ச்சி)

நலத்தைப் பேணிக் காக்கவேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். தங்கள் நலனிலேதான் தமிழ்கூறும் நல்லுலகின் உயர்வு அடங்கியுள்ளது.

கொடிய ஆரிய நரிகள் தங்களின் கீழ்மையான வஞ்சகத்தால் நம் தமிழ்நாட்டின் அரசுக் கட்டிலேறித் தமிழர்க்கு பெருந் தீங்கு செய்து வரும் இந்நாளில், தங்களைப் போன்றோரின் அருந்தமிழ் அரசியல் தொண்டே காரிருளில் ஒளிபோல் சிறிதே ஆறுதல் தருவதாக உள்ளது.

உரிமை பெற்ற— எதிர்காலத்தில் மலரப்போகும் தமிழீழத்திலும்—தனித்தமிழ் நாட்டிலும்—தங்களின் அளப்பரிய—விலை மதிக்க இயலாத—தந்நலம் சிறிதுமில்லாத— அரிய தொண்டு பொன்னெழுத்துகளால் வரலாற்றேடுகளில் பொறிக்கப்படுவது மட்டுமின்றி, வியத்தகு திறச் செயல்களைச் செய்யப் போகும் புதிய தமிழ் இளைஞர் எண்ணங்களில்—நரம்புகளில் அரத்த அணுக்களில்—எல்லாம் தங்களின் தமிழ்க் கனவுகளை நிறைவேற்றும் வலிமையை தருவதாய்த் தங்கள் திருப்பெயர் நின்று நிலவும். வாழ்க தமிழ்! மலர்க தமிழ்ஈழம்! வெல்க தனித் தமிழ் நாடு! தங்கள், —தமிழ் மகிழ்நன், திருக்கழுக்குன்றம்.

O : 1519! ப
மணிமாறன்

வணக்கம்: ஐயா, கடலூர் தங்களை நேரில் பார்த்த

பேரது தாங்கள் உடல் நோயால் மிகுந்த வருந்திய நிலையில் இருந்தது கண்டு என் மனம் மிகுந்த துயரம் உற்றது. தங்களது கடுமையான உழைப்பினுல் தமிழும் தமிழினமும் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும். தங்கள் நோய் வெகுவிரைவில் குணமடைந்து தமிழுக்கு நல்ல தொண்டு ஆற்றவேண்டும். தங்கள் அன்பு,

—அ. ஆறுமுகம் மாயனூர், திருச்சி மா.வ

O : 1520 : போற்றுதலுக்குரிய ஐயா பெருஞ்சித்திரனுர் அவர்களுக்கு வணக்கம். தமிழுக்கும், தமிழருக்கும் உழைக்கும் தங்களின் பாங்கு என்னைப் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது. தாங்கள் பல்லாண்டுக் காலம் வாழவேண்டும். தென்மொழி முதன் முதலில் எங்கள் ஊரில் தான் அச்சிடபெற்றது என்ற செய்தியை நான் முன்னமேயே அறிந்திருந்தேன். இருப்பினும் இரு திங்களுக்கு முன் வெளியான தென்மொழி இதழில் நீங்கள் மேற்கண்ட செய்தியை எடுத்துக் காட்டி உறுதிப்படுத்தி எழுயிருந்தீர்கள். அதைப் படித்தவுடன் என்னையே அறியாமல் எனக்குச் செருக்கு வந்துவிட்டது. என் ஊரைப் பற்றி எனக்குத் தற்பெருமை வந்துவிட்டது.

தூயதமிழ்க் கொள்கை மீதும் என் தாய்மொழியான தமிழ் மீதும் விளக்கம் தெரியாத காலத்திலிருந்தே ஒரு வகையான பற்று எனக்கு உண்டு. இருப்பினும் தற்போழ்து ஓர் ஐயம். அது:

தமிழ்தான் வடமொழிக்கு அடிப்படை என்கிறோம். வடதமிழான பிராகிருதத்திலிருந்துதான் சமசுக்கிருதம் செம்மையடைந்து எனக் கூறுகிறோம். எனவே சமசுக்கிருத சொற்களெல்லாம் தமிழேயாகும். முன்னம் தமிழில் அவை எப்படி வழங்கி வந்தனவோ அப்படியே நாமும் கையாள வேண்டியதுதானே. ஆனுல் வடமொழி எனக் கூறித் தள்ளிவிடுகிறோம். உலக முதன்மொழி தமிழ் என்றுல் பிறமொழிச் சொற்கள் எல்லாம் தமிழ்சொற்கள்தாமே, ஆனுல் பிறமொழிச் சொற்கள் என நாம் தடை செய்கிறோமே. இந்த முரண்பாடு ஏன் என அருள்கூர்ந்து விளக்குவீர்கள் என எதிர்பார்க்கிறேன். இன்ன வண்ணம்

—இரா, வைத்தீசுவரன் நெல்லிக்குப்பம்.

(ஆசிரியர் விடை: உலக மொழிகளுக்கெல்லாம் மூலம் தமிழ்தான் என்றுலும், அத்தமிழ்ச் சொற்கள், சமசுக்கிருதம், இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற பிறமொழிகளில் வழங்கும்பொழுது திரிந்தும், திசைந்தும், சிதைந்தும், உருமாறியுமே வழங்குகின்றன. எனவே சிதைவுற்று உருமாறிப் போன சொற்களைத் தவிர்த்து மூல முழுவடிவச் சொற்களையே வழக்கில் கொண்டு வருவதுதான் நம் தூய தமிழ் முயற்சி என்பதை நன்கு நினைவில் கொள்ளுதல் வேண்டும் என்க. —ஆசிரியர்)

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைத் தடுக்க என்ன போராட்டம் நடத்தினர்; அப்படியும்
ஒரு சிலர் எதிர்ப்புத் தெரிவிப்பார்களானால் இந்த இனக் கேடர்-
களாலேயே அவர்கள் அடக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம்
மக்கள் அறியச் செய்ய என்ன செய்தோம்? செய்ய முடிகிறது?
இந்த நாட்டில் யார் யாரோ எங்கிருந்தோ வந்தெல்லாம் கல்வி
கற்கின்றனர்; உயர் கல்வி பெறுகின்றனர். ஆனால், தமிழன்
என்ற ஒரே காரணத்திற்காக ஏதிலிகளாக வந்த ஈழத் தமிழ்
மாணக்க, மாணாக்கியர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டுள்ளது.
நீண்ட நெடுங்காலமாக வரலாற்றாலும், மொழியாலும், பண்-
பாட்டாலும் பிணைக்கப்பட்டவர்கள், அவர்கள் துரத்தப்படு-
கிறார்கள்; அதற்கு. இங்குள்ள கோடரிக் காம்புகளே துணை-
போகின்றன. எனவே இத்தனைக் கொடுமைகள் நடந்தும்
இனத்தையே தாக்கக்கூடிய வீழ்த்தக் கூடிய கொடுமைகள் நடக்-
கின்றன. இதற்கு ஏதாவது மறியல், போராட்டம், பேருந்து
எரிப்பு நடந்ததா? ஒரு காலத்தில் பொங்கி வழிந்த இன-
வுணர்வெல்லாம் இன்று காயடிக்கப்பட்டுவிட்டதே; இக்
கொடுமைகள் தீர்வதெப்போது? கல்வி நிலையங்களில் கன்னித்
தமிழ் மேலோங்கி நிற்பதெப்போது? கலைகள் எல்லாம் தாய்
தமிழில் தரும் நிலை ஏற்படுவதெப்போது? தமிழ், இலக்கிய, இலக்-
கணங்கள் தமிழ் மண்ணில் பிறந்த இருபாலரும் கற்றுக் காட்டா-
றும் அறிவு வளம், அறிவியல் வளம், பெருக்கெடுத்துப் பாய்வ-
தெப்போது? அந்த வெள்ளத்தில் தமிழால் முடியாதென்போரும்-
தம் வயிறு வளர்க்கத் தமிழைத் தாழ்த்துவோருக்குத் துணைபோ-
கும் பிழைகளும், காட்டிக் கொடுப்பான்களும், கயமைகளும்
கீழ் மக்களும், தன்மானமற்ற எச்சில் இலைகளும், தமிழனால்,
தமிழால் உயர்ந்தும் பின்னர் எட்டி உதைக்கும், இழித்துப்
பேசும், குப்பை கூளங்களும் அடித்துக் கொண்டு போய் அழிப்ப-
தெப்போது; உண்மையாளர்களும், உழைப்பாளிகளும் உயர்வ-
தெப்போது? காசையும், துய்ப்புகளையுமே முதாமையாகக் கருதி
மாந்தனது முகாமைப் பண்புகளை, மறந்துபோன, மாண்புகள்
மாய்ந்தொழிவதெப்போது? இனக் கேடர்கள் இருந்த இடம்
தெரியாமல் இல்லையாய்ப் போவதெப்போது? பாராண்ட தமி-
ழன் பண்பால், படைப்பாற்றலால் பாரில் உயர்ந்தான் எனப்
பாரோர் போற்றுவதெப்போது? பண்பாளர், பொதுநோக்-
காளர், நடுநிலையாளர் தமிழ் நாடாள்வதெப்போது! எப்போது!
எப்போது!!! —புலவர். அறிவுடைநம்பி, மூலனூர்.

ஒரு திருத்தம்!

சென்ற 'தென்மொழி' (சுவடி 26:ஓலை9)-இல் வெளிவந்த 'திருக்குறள் உரைச் சுருக்க'த்தில், பக்கம் 9, இறுதிப் பத்தி மூன்றும் வரியில் உள்ள 'வால்' என்பதைத் 'துதிக்கை' என்று, திருத்திக் கொள்க; பிழைக்கு வருந்துகிறோம்.

தமிழர் திருமண வரலாறு

—த. ச. தமிழனார்—

(முன்னுரை : இக் கட்டுரை, தஞ்சை திரு: அரசிறைவன் (இராசாங்கம்) அறி.இ. திருவாட்டி கதிர்மதி (பானுமதி) ஆகியோர்க்குத் தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில், தி.பி. 2005 சுறவம் 21 (3-2-74) ஆம் பக்கல் நடைபெற்ற திருமண-விழாவில், அதன் நினைவாக வெளியிடப் பெற்றதாகும். தென்-மொழி அன்பர்களின் பயன் கருதி இக்கால் இதனை மீண்டும் இங்கு வெளியிடுகிறோம்.)

1. சொல் நிலை:

மணம் என்னும் சொல்லிற்கு நேரிய பொருள் பொருந்துதல் (மண்ணுடை முடங்கல்) என்பதே. கழுவுதல் (வாள் மண்ணுநிலை), தோன்றுதல் (மணந்தனான்று), நாறுதல் (மணத்-தல்) (மருமகன்) முதலியன சார்புடைப் பொருள்கள். 'திரு'வென்-பது சிறப்புப் பற்றியது. திருக்குறள் போல, மணம் என்னும் பொருட்டாய 'கடி' என்னும் சொல்லும் இணைத்துக் 'கடிமணம்' என்றும் ஒரு பொருட் பன்மொழியாக அழைக்கப்பட்டுள்ளது; அன்றிக் கடிவிழா எனக் (கடிநூல்—மங்கல நாண்) காப்புப்பற்றி-யும் வழங்கும். மனையறம் படுத்தல் என்றும், வாழ்க்கை ஒப்பந்தம் என்றும் பழமையிலும், புதுமையிலும், கருத்து விரியும் பெயர்கள் உள.

பகுப்பு: உயிர்கட்கு இயல்புணர்ச்சியாகிய பசி, காமம் இரண்டும் உலகந் தழுவியன. இவ்விரண்டும் பிறமனவெழுச்சிக்கு அடியாவன. இரண்டையும் தமிழர் புறம், அகம் எனப் பிரித்-துரைத்தது பெரும் பாங்குடையது.

	புறம்	அகம்
உணர்வு :	பசி	காமம்
துணை :	நண்பன்	மனைவி
பொழுது :	பகல்	இரவு
களம் :	நாடு	வீடு
விளைவு :	துன்பம்	இன்பம்
முடிவு :	இறப்பு	பிறப்பு

இவ்விரு வரிசைக் கியைய அமைந்த உலக வாழ்வின் இறப்பிலும் பிறப்பிலும் காலப்போக்காலும் ஞாலப் போக்காலும் சமயத்தின் பேராலும் சில கரணங்கள் (சடங்குகள்) உட்புகுந்தன; ஆம்! கரணங்கட்கு நடுவும் கெடுவும் இவ்விரு நிகழ்ச்சிகளே.

2. மாந்தர் தொடக்க மணம்:

மாந்தத் தோற்றத்தும், காட்டு விலங்காண்டிக் காலத்தும் மணநிகழ்ச்சி வரன்முறைப் படப் பன்னூறாண்டுகள் சென்றே-றின; தாய் தன் மூத்த மைந்தனைத் துணைவனாக் கொண்டிருந்தது

முதலாகக் குழூவுணர்வுகள் (எங்கல்சு) பலபட்டன; ஓரளவு திருந்திய பின்றை ஒரு வயிற்று மக்கள் தம்முள் கலவாத நிலை காணப்பட்டது; அத்தை, மாமன் மக்கள் மணவுறவு கொளப்-பட்டனர். மற்று பெற்ஞோரோடு பிறந்த வேறு பாலினரேயன்றி ஒத்த பாலினரும் (சிற்றப்பர், சின்னம்மை, மக்கள்) மணவுறவு கொள்ளும் வழக்கம் சில மரபினரிடையே உள. இன்னும் கூறின் முன்னைய அயற்பால் மணப்பினரே சில தலைமுறை கழிந்ததும் ஒரு வகையில் ஒத்த பாலினரை மணப்பது மறைமுகமாகும். எவ்வாற்-ருேனு நாகரிகப்பட்ட உலக மக்களின் வரலாற்றில், தலைமக்கள் ஆய தமிழர்களின் திருமண நிகழ்ச்சியை வரலாற்று முறையே நிரலாற்றுவோம்;

இலக்கிய வாழ்க்கை:

குமரிநில அழிவும், தலையிடைக் கழக நூல்கள் கழிவும் போக எஞ்சிய கடைக்கழக நூல்களில் திருமணக் குறிப்புச் சிலவாயும், அவற்றுள் கரணங்கள் இலவாயும் உள்ளன. தொன்மைத் தமிழர் வாழ்வமைப்பில் அகவை தவிரப் பிறவற்றுல் ஒத்த இருபாலினர் ஒருவர் ஒருவரைக் கண்டு கேட்டுக் குறிப்பறிந்து கூடிப்பிரிந்து—மறுநாளும் (இடந்தலைப்பாடு) அவ்வின்பந் துய்த்துப் பின் பாங்கன், பாங்கி துணையொடு புணர்ந்து, பகலில் ஊர் ஓரத்தும், இரவில் தலைவியின் வீட்டுக் கொல்லையிலும் மருவியும் இன்பந் துய்த்தும் சிலகால் இடையூறுபட்டுமிருப்பர். தாயர் குறி கேட்டு அலமர, தோழி குறிப்பு மொழியால் அறத்தொடு நிற்க, உடன்படின் மணமுடியும். உடன்பாடின்றேல் தலைமகன் தலைவி-யின் உருவெழுதி ஊரின் நடுவிலிருந்து மடலூர்தல் உண்டு; அன்றேல் தலைவனும், தலைவியும் உடன்போக்கு (இழுத்துக் கொண்டு ஓடிப்போதல்) நிகழ்த்துவர். தந்தை தன்னையர் மீட்டலும் ஆம்; ஊரறிந்த பின்-மீண்டு செவிலி தேடிப்புக்குச் சான்ஞோரால் அறிவு கூறப்பெற்றுத் திரும்புவர். மங்கையின் சிலம்பைக் கழித்து (கழுவி) வரைவு முடிப்பர்; ஒன்றுபட்டு வாழ்வர். குடும்பத்தார் மாறுமனப்பான்மையின் இடையிடை-வேறும் நிகழ்வன உண்டு. கொள்ளும் இக்குறிப்பு நாடக வழக்கி-னும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கக் குறுக்கம்;

கரணத் தோற்றம்:

இவ்வாறு ஆற்றொழுக்கான வாழ்க்கைப் போக்கு தோன்று-முன் தலைமக்கள் தம்முள் கலந்த போக்கினை கைநெகிழ்ந்தனர்; குமுகாயச் சூழலில் ஆடவர்க்கே இது மிக வாய்ந்தது. அதனால், இவட்கு இவன் என வரையறுத்தற் பொருட்டே திருமணக் கரணம் தோன்றியதாகத் தொல்காப்பியங் கூறுகிறது.

> பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப";

Scanned with CamScanner

பொரய்*: கருவுறும் முன்பே கைந்நீங்குதல்;
வழு : கருவுற்றபின் கைவிட்டமை;
அய்யர் ; தமிழ்ச் சான்றோர்.
(பொய் : ஒருத்தியை மணந்த பின், அவளை மணந்திலேன் என்று கூறுவது.
வழு : ஒருத்தியை மணந்த பின், அவளைப் பிறர் அறியக் கை விடுவது;
என்னும் பாவாணர் குறிப்பும் கருதற் பாலதாம்)

இன்றும் சுற்றமும் நட்புஞ் சூழ வந்திருத்தல் சான்றிற்கே என்க.

மற்று திருமணக் கரண வரலாற்றில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்பதைக் காண்போம்;

கரணங்கள்:

அகநானூற்றில் இருபாடல்களில் (86,136) காணக்கிடப்பன என்று பலரும் எடுத்துக்கூறும் பாடல்களின் பான்மைப்படியே— பந்தரின் கீழ்ப் பரப்பப்பட்ட வெண்மணல் திட்டில் அமர்த்திய திருமண மக்களை அவ்வயிற்று மகப்பெற்ற மங்கல மகளிர் நால்வர் வாழ்த்தினர். பின் மாலை நாற்றிய ஏற்றப்பட்ட குத்துவிளக்குகள் இருப்ப அதுபோல் ஒளிரும் வாழ்வைத் தொடங்கினர்; உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை உண்டு உறவினர் உவந்தனர்: சிலம்பில் தீவலம் வருதலும், பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலியவற்றில் அயிராணி (அருந்ததி) காட்டலும் மென் மெல புக்க வழக்கங்கள் ஆதலை உணர்கிறோம்; சமண இலக்கியங்கள் தம் மதப்படியே இவற்றைக் குறித்தன. அடுத்து நாலாயிரத் தெய்வப்பனுவலில் 'அம்மி மிதிப்பக் கனக்கண்ட" ஆண்டாளைக் காண்கிறோம். எனவே, கால உருட்சியில் கலந்தெழுந்த வழக்கங்கள் ஒருருப்பெற்றன. சிலம்பில் மங்கலவாழ்த்துக் காதை இறுதியில் அரச வாழ்த்தாகக் காண்பது 'அரசாணைப் படி' அவ்விழா நடந்தமைக்கு நன்றியே; இதுவே அரசாணிக்கால் ஆயிற்று. பிற உதிரிக்கரணங்கள் ஆரிய வேள்வி முறைப்பற்றியும், வருவாய் வகைபற்றியும் அமைந்தன. கல்வெட்டு வாயிலாய்த் திருமணக் காட்சியொன்றும் நமக்குத் தென்பட்டிலது, கோயில் சார்ந்தும் அரசக் குடும்பஞ் சார்ந்துமே செய்திகள் பொறிக்கப்பட்டமையான்.

மொழி:

ஆரியத் தலைமை குமுகாயக் குடுமியாக அமைந்ததும் அவ்விடத்தில் வடமொழியும் செருகிக்கொண்டது. கோயிலில் குடிபுகுந்து, ஆட்சி மொழியாய்ப் பல்லவ களப்பிரக் காலங்களில் அறிவிக்கப் பெற்றுப் புரியா ஒலியில் கனைக்கப் பெற்றுப் பெரிதாய் நினைக்கப் பெற்ற வடமொழி தமிழரின் கரணங்களிலும்

தலை நீட்டியது. தன்னிலை நாட்டியது: இடைக்காலத்தில்
பண்டாரமுறை, நாட்டாண்மையர்முறை எல்லாம் ஆரிய
வழக்கங்களை ஆள்மாறிச் செய்வதாயின. அங்கும் தேவாரத்
திருப்பதிகங்கட்கிடையே வடமொழி ஓதல் பெருமையாயிற்று.

உணவு:

காமநெறிப்பாட்டு விழாவில் பசி நிறைவும், நாச்சுவையும்
படை உண்டி படைத்தல் ஒத்ததே. அஃதும் பண்டையில் தென்-
திசை ஊர்களில் ஏழுநாள், ஐந்துநாள், மூன்று நாள் என
ஒற்றைப்படை நாட்களில் விழா நீண்டது போக்குவரத்தும்
அஞ்சலும் இல்லாத காலங்களிற் பொருந்தலாம். பலர்க்குப்
பணியும் உணவேற்பாட்டில் விலையுயர்வும் அமைந்த இன்று
அது பேரிடர்க்கும் பெருஞ் செலவிற்கு முரியது. உறவு நட்பினர்
வந்து கலந்து பங்கேற்குங்கால் ஒய்ந்திருந்து ஒருநாள் உணவு
முடிக்கும் அளவு மனமகிழ்வு விளையுமாதலின் அவ்வளவு பட்ட
உணவு அமைவதே. கூட்டத்திடையில் வந்து குந்தும் ஏழையரை
விரட்டுவது எச்சிலைச் சோற்றினுமிழிந்தது.

மணப்பணம்:

'வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்து 'தலைமகன்
தந்தை பொருளோ' முந்தைபொருளோ கொளாது தன்னுழைப்-
பின் சொந்தப் பொருள் கொண்டு முடிக்கக் கருதிய மணநிலை
இன்று இழிநிலைப்பட்டுள்ளது. முலை விலை கூறல் போக இந்நாள்
பெண் பெற்றோர் பேதுற்று நிற்கும் நிலை வெட்கும் நிலை, காஞ்சி
சங்கராச்சாரியார் தம்மினத்தார் கொடுமை கண்டு மணப்-
பணம் பெறுதார்க்குத் தாம் அருளும் பொற்காசு சில ஆயிரத்-
தைக் குறைக்கிறதேயன்றி பல ஆயிரத்தைத் தடுக்கவில்லை. இக்
கொடுமை போயொழியும் நாள் தெரியவில்லை. அலுவலகப்
பணியிலேயிருக்கும் இளைஞர் தாம் மாமனாரிடம் பெறப்போம்
பொருளினைப் பலரறியக் கூறிப் பூரித்தல் ஆண்மைக்கழகென
எண்ணுவர் போலும்! ஆயின், அஃது அன்பு அடிமையை ஆட்டிப்
படைக்கும் கொக்கரிப்பென்றுணர்க. பாரி மகளிரை மூவேந்தர்க்
கஞ்சி மணவாது கறைபட்ட மண்ணில் இஃதென்னே?

தாலி:

தொன்மைத் தமிழர் திருமணத்தில் தாலி உண்டா இன்று-
என்னும் வினா அறிஞர்களை இரு கட்சியாகப் பிரிப்பது. அகநா-
னூற்றுக் குறிப்பில் காணப்படாது சிலம்பில் மங்கல வாழ்த்துக்
காதையிலன்றி மற்றொரு காதையில் காணலுறும் மங்கல நாண்
பெண்டிர் மணமானவர் என்பதனடையாளமே. மற்று மண-
மகனுக்குக் கால் விரலில் சில குடியினரில் அணியப்படும் மிஞ்சி
(மெட்டி) ஒருநாள் கூத்தாகிறது. முன் அதுவே நெடுங்குறியாக
இருந்தது போலும். பின் அதுவும் பெண்ணைப் பற்றியது.
திருமண அடையாளம் இருப்பின் இருவர்க்கும் இருப்பதும் இன்-
றேல் இருவர்க்கும் இல்லாதொழிவதுமே வருங்கால மேற்பதா-

கும். 'தாலி என்பதும் தாலம்—பனை ஓலை சுருட்டி முடியப்பட்டது என்னும் பொருளில் அமைந்ததென்றும்- தால் தொங்குதல் என்னும் பொருட்டாய் வாய்ந்தது என்றும் கூறுவர்;

பெயர் கூறுமை:

கற்பிற் சிறந்த மற மங்கையர் என வழங்கப்படுவர், மண்டோதரியும், கண்ணகியும். மண்டோதரி தன் தலைவன் மாண்டுகிடக்குங்கால் தூண்டியெழுந்த அவலத்தில் 'இராவணனார்' என்று கணவன் பெயரைக் கூவிக் கரைந்தது உள்ளங்கொளத்தக்கதாகும்.

'ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி
நின்பாற் கொலைக்களப் பட்ட கோவலன்
மனைவி கண்ணகி என்பதென் பெயரே'

என்று துயர்ச்சினக் கண்ணகி கணவன் பெயரைச் சிறப்பீரும் ஆரின்றி நவின்றதும், மாமனார் பெயரைப் புகன்றதும் நோக்குக. எனவே, இன்றியமையாப் பொழுதில் கணவன் பெயர் கூறல் தமிழ்ப் பெண்டிர் வழக்கமென்க;

கற்பு:

உலகநாடு முற்றிலும் ஆண் தலைமையே நாகரிகக் குமுகாய வளர்ச்சியின் அடிதொட்டமைந்து விட்டதால். பெண் தாழ்வு தானே படிந்துவிட்டது. 'தையல் சொல் கேளேல்' எனப் பெண்ணைக் கொண்டே பெண்ணை இழிக்குங் குமுகாய மனப்பான்மை முற்றியதறியலாம். திருவள்ளுவர் கூட வாழ்க்கைத் துணைநலம் கூறித்தன் நூலின் முதல் இயலைத் தொடங்குவதால் ஆடவர்க்குரிய நூலோ திருக்குறள் என்று ஐயுற வேண்டுவதாகிறதே.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என்று வினவெழுப்பிப் பெண்ணிற் பெருந்தக்கதில்'' என விடையும் மொழிந்தமையால் அவ்வையந் தீர்கிறது.

''கற்பு'' என்னுஞ் சொல் 'பு'கர இறுதியாய கற்றல் என்னும் பொருளுடைய தொழிற் பெயர். (தொல்—சொல்). (கற்பு என்பதற்குக் கல் போன்ற திண்மையான இருபாலரிடைக் காதற்பண்பு; மணப்பருவம் வரைத் தோன்றாதிருந்து ஒருவரையே காதலிப்பது (கல்—கற்பு)—என்று பாவாணர் குறித்திருப்பதும் நோக்கத்தக்கது. இன்று இச்சொல் பண்பாட்டு உரைகற் சொல்லாக உயர்ந்திருக்கிறது. தனக்கு இவர் எனக் கற்பிக்கப்படும் பண்பைச் சுட்டிப்பின் குமுகாயக் கட்டுப்பாட்டால் மாறாதிருந்த மங்கைப் பண்பை மட்டும் குறிப்பதாகிறது.

திலகவதியார் மனவுறுதி நடந்து, இறந்த கலிப்பகையாரே கணவன் எனக்கொண்டு இறக்கத் துணிந்த மனவுறுதி இதனைக் காட்டும். இப்பெண் தன்மை ஆடவர்க்கும் இருப்பின் பெருமை என்று உலக அறவுரையில் முதலிலாயினும் ஒட்டவைத்து திருக்குறள் பெருமை கூறும் அளவில் பரத்தமை நம் நாட்டில் விளங்கியது. அஃது இலக்கிய உத்தியென முழுவதையும் ஒதுக்கி-விடல் ஒல்லாது.

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று"

என்று திருக்குறள் தெரிவிக்கும் கருத்திற்குத் தீர்வு இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அன்றி, மேலைநாடுகளில உள்ளாங்கே-குறட்டையொலி மிக்குள்தென்று மனைவி வழக்கிட்டுப்பெறும் மணவிலக்கும் மாந்தப் பண்பிற்கு ஏற்றதன்று. எதிர்கால் ஒருலகப் பேராட்சியில் ஒருமித்த பண்பாடு உருவாகும் போதில் இரண்டையும் எடையிட்டுக் கலந்த ஏற்றமிக்க கற்புப் பண்பாடு ஏற்றுக்கொள்ளப்பெறும். அண்மையில் செருமனி நிறைவேற்றி-யுள்ள மனைவி மாற்று முறைச்சட்டம் உடலுக்கும், உள்ளத்திற்-கும் மாசூட்டமும், ஊசலாட்டமும் தருவது. சிறுபிழையும் இல்-லாத மாந்தர் இல்லையாதலின் புரிந்து கொள்ளுதலும், விட்டுக்-கொடுத்தலுமே வேண்டும்.

திருந்திய திருமணம்:

சிவனிய சமயத் திருத்த முறையில் மறைமலையடிகள் இயற்-றிய மணமும், வள்ளலார் வழியினர் நன்னெறி (சன்மார்க்க) வழியில் நடத்தும் மணமும் ஒரே வழிக் கடைப்பிடிக்கப்படு-கின்றன. பாவேந்தர் தம் குடும்பவிளக்கு மூன்றும் தொகுதி-யாய்த் திருமணமுறையொன்றை அறிமுகம் செய்துள்ளார். பதிவுத் திருமணம் ஆங்கிலச் சட்டமுறை. மற்று ஆயிர ஆண்டுப் பழமையைக் குப்புறக் கவிழ்த்துத் தமிழ்க்குடி உயர்த்திய பெரியாரின் சீர்திருத்த முறைத் திருமணம் அண்ணா ஆட்சிக்-காலத்தில் சட்டமும் ஆயிற்று.

தகுதமிழ்த் திருமண முறை:

அதன்படி இக்கால் வழக்கில் மணமக்களை மாலை மாற்றித் தாலி நாண் பூட்டச் செய்து, பொழிவாளர் பேச்சு மழை பெய்-வதும் வழக்காயிற்று. நூற்றுவர் கூடிய இடத்தில் தூற்றிப் பதர் அகற்றிய கருத்துரைக்கும் மரபு தமிழகத்தில் கால் நூற்றாண்-டாகக் கால்கொண்டுள்ளது. பன்மொழிப் புலவர், கா. அப்பாத்-துரையார் கருத்துப்படி மணமகனே கூட்டத் தலைவன் எனல் ஏற்கத்தக்கது. எனவே, கூட்ட முன்னிலையாக இரு குடும்பங்-களின் நாற்பாட்டன் பாட்டிகளில் ஒருவர் வீற்றிருக்க, தொண்-டுணர்வும், கற்கண்டுரையும் கொண்டவொரு தொண்டரை வாழ்த்துரைக்கும் முகத்தான் வாழ்விற்குப் பயனுரையாற்றச்

செய்யலாம்; மணமாகாதார் வாழ்த்தாமை மரபாகலாம்; பண்டைக் குருட்டுத் திருமணத்திற்கு ஒருமுறை இருந்ததுபோற் புதுமைத் திருமணங்கட்கு வரன் முறையொன்று கவித்துக் கொள்ளல் நன்று; மஞ்சள் விராய அரசிபொழிநற்கு மாற்றாக முல்லை மொட்டுகளைத் தூவலாம்.

விழாநாள் ஞாயிறு போலும் விடுமுறை நாளாகவும் அதிலும் அன்பர்கள் அணியமாகி வரத்தக்க '10—11' மணிப்பொழுதாக-வும் தேர்ந்தெடுத்துக் கொள்க. அழைப்பிதழில் திருவள்ளுவர் ஆண்டு முதலானவற்றையிட்டுத் தனித்தமிழ்ச் சொல்லால் அமைக்க.

நிகழ் நிரல்:

1. தமிழ் வாழ்த்து: ('நீராரும்' முதல் பன்னிரண்டடியும் பாடுவிக்க;
2. வரவேற்புரை: அளியன் (மைத்துனன்) அல்லது குடும்பப் பொறுப்பினர்
3. முன்னிலை-யாளர் மணவுரை: இரு குடும்பத்தினில் யாரேனும் ஒரு பாட்டன், தாத்தா, பாட்டி
4. மணமக்கள் - அறிமுகவுரை: நம்பி, நங்கை மாமன்கள் அன்றேல் அறிந்த அன்புடைப் பொறுப்பினர் (அகவை, தொழில், பண்பு முதலிய விளக்கம்)
5. பெற்றோர் உடன் பாட்டுரை: தந்தையும், தாயும் அவை முன்னிருந்து இரண்டொரு வரிகளில் தன் குடும்பச் சார்-பாய்த் தருவதாய் கூறல்
6. மணமக்கள் உறுதிப் பாட்டுரை: நம்பியும், நங்கையும் தம் குரல்பட மனமு-வந்து ஏற்றுக்கொள்வதை உறுதிப் படுத்தல் (எழுதிய குறிப்பும் பயன்படுத்தலாம்)
7. தாலிநாணிடல்: (கவன ஈர்ப்புக்குக் கொட்டுமேளம் நன்றே)
8. தக்கார் வாழ்த்துரை: (மணமாகாதவர் நீக்கம்)
9. அன்பளிப்புகள்: (மொய்யும், வாழ்த்தேடுகளும் அன்புப் பிணைப்பே)
10. நன்றியுரை: தம்பி, அன்றேல் நண்பர்;

கரணிய கருமங்களோடமைந்த இந் நிகழ்நிரலைத் தமிழகம் ஏற்றுத் தகுமுறை நோற்று நடைமுறைப் படுத்தும் என நம்பு-கிறோம்.

திருமணம் குறித்த பிற கழக இலக்கியச் சான்றுகள்:

ஐங்குறுநூறு — 86, 380, 399;
அகம் — 86, 136, 385;
கலி — 52, 96.
நற்றிணை — 393;
குறிஞ்சிப்பாட்டு — அடி - 231 - 233;

நாடகம்: தொடர்: 2

காளாம்பி

நாடக ஆக்கம்: அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'பாவியக் கொத்'தில் 2—ஆவது பாவியம்)

காட்சி—2

உறுப்பினர் : அவன்—அவள்
இடம் : தென்னந்தோப்பு
காலம் : காலை
நிலை : பழைய நினைவுகளைக் காட்டும் காட்சிகள்.

அவன் : (தென்னந்தோப்பில் நின்று உலாவி) வரச் சொன்னாள் வந்தேன். (திரும்பிப் பார்க்கிறான்) ஐ! வந்து விட்டாள்.

அவள் : (அண்மையில் கையில் பொங்கல் ஏனத்துடன் வருகிறாள்)

அவன் : என்ன கையில்?

அவள் : கையில் என்ன இருக்கும்? பொங்கல்.

அவன் : அப்படியா!

அவள் : (பொங்கல் ஏனத்தை அவன் பக்கம் நீட்டி) இ. அத்தான்! இந்தப் பொங்கல் ஏனத்தை வாங்குங்கள்.

அவன் : சாப்பிட வேண்டியதுதானே.

அவள் : ஆமாம். வந்து, குடிக்கத் தண்ணீர் வேண்டாமா?

அவன் : தண்ணீர்தான் ஆற்றில் ஓடுகிறதே!

அவள் : அது தூய்மையற்ற நீர். நான் இந்த மணலைத் தோண்டி ஊற்றில் நீர் எடுத்துத் தருகிறேன்.

அவன் : சரி, அப்படியே செய்(பொங்கல் ஏனத்தை வாங்கிக் கொள்கிறான்)ஏனத்தைக் கொடு,

அவள் : (கொடுத்துவிட்டு மணலில் அமர்ந்து ஊற்றுத் தோண்டுகிறாள்) அத்தான்! இந்தத் தண்ணீர் எவ்வளவு தூய்மையாக இருக்கிறது, பார்த்தீர்களா?

அவன் : பார்த்தேன், பார்த்தேன். நம் உள்ளத்தில் ஊறும் காதலும் இவ்வகைத் தூய்மையானதுதான்.

அவள் : இந்த நீர் இந்த ஊற்றுக்குள் கிடக்கும் வரை தூய்மையானதுதான். ஆனால் ஓடும் ஆற்று நீர் இந்த ஊற்றுக்குள் பாய்ந்து விட்டால், தூய்மை கெட்டுவிடும். அதுபோல குமுகாயச் சூழல் நம் காதலில் பாய்ந்தால்...

அவன் : அப்படியெல்லாம் கற்பனை செய்யாதே, அப்படியே ஆற்று நீர் ஊற்றுக்குள் பாய்ந்தாலும் அந்த ஊற்று நீரை அடித்துக் கொண்டு போகுமல்லவா?

Scanned with CamScanner

அவள் : ஆமாம்; ஆமாம்;

அவன் : அதுபோல நம்மை அடித்துக் கொண்டுதானே இந்தக் குமுகாயம் போகும்; அழிக்காதல்லவா?

அவள் : நாம் உறுதியோடு இருந்தால் குமுகாயம் எப்படி அழிக்கும்? முடியாது;

அவன் : அப்படியானால் நம் காதல் உறுதியற்றது என்கிறாயா?

அவள் : இல்லை. அப்படி ஒரு சூழல் வந்துவிட்டால் என்ன செய்வது என்று...

அவன் : ஒன்றும் செய்ய வேண்டாம்;

அவள் : அத்தான்! என்னை நீங்கள் மறக்கமாட்டீர்களே?

அவன் : போ; அ'தென்ன அப்படிக் கேட்டுவிட்டாய்?

அவள் : ஒரு கதை கூட உண்டு, உங்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். சொல்லட்டுமா ?

அவன் : சொல்லேன்; கதை என்றாலே, அதில் காதல் காட்சிகளும் இருக்கும்; நீயும் சொல்.

அவள் : ஆமாம். நானும் காதல் கதையைத்தான் சொல்லப் போகிறேன்; அ'தாவது சகுந்தலை நாடகம்.

அவன் : காளிதாசன் எழுதினது. சொல்; அது நல்ல காதல் கதையாயிற்றே!

அவள் : சகுந்தலையைக் காதலித்து மணஞ் செய்து கொண்ட துசுயந்தன் சகுந்தலையைத் தன் மனைவிதான் என்று அறிந்து கொள்ள ஒரு கணையாழி தேவைப்பட்டது.

அவன் : அன்பே, துசுயந்தன் ஓர் அரசன்; அவனுக்குப் பல பெண்களைக் கூடுதற்கு வாய்ப்புகள் உண்டு. அதனால் யாரை எப்போது காதலித்தோம், மணம் செய்தோம் என்று அவனுக்கு நினைவிருக்காது; அதனால் துசுயந்தனுக்குச் சகுந்தலையைப் போன்ற எத்தனையோ மனைவிமார்கள் இருந்திருக்கலாம். அதில் ஒருத்தியே சகுந்தலை. எனவே இவளும் அவள் மனைவிதான் எனக் காட்ட கணையாழி தேவைதான்.

அவள் : என்ன? அரசர்களுக்குப் பல மனைவிகள் உண்டா?

அவன் : ஆமாம்; தசரனுக்கு மூன்று மனைவியர் உண்டு எனப் படித்திருப்பாயே;

அவள் : அதுமட்டுமா படித்திருக்கிறேன், துரௌபதிக்கு ஐந்து கணவர் என்றும் படித்து அதிர்ச்சியடைந்தேன்;

அவன் : இப்படியெல்லாம் அரசர்கள் விளையாடுவார்கள்; அதனாலேயே சகுந்தலைக்குத் துசயந்தன் மனைவி என அடையாளம் காண ஒரு கணையாழி தேவைப்பட்டது. உனக்கும் நான் ஒரு பரிசை என் நினைவிற்காகக் கொடுக்கப் போகிறேன்; (பொன் கழுத்தணியை அவளுக்கு அணிவிக்கிறான்); (திரை)

(காட்சி மாற்றம்)

காட்சி—3

உறுப்பினர் : ஒருவன், அவள், குழந்தை, பயணிகள் சிலர்.
இடம் : ஓடும்; தொடர்வண்டி.
காலம் : மாலை.
நிலை : பழம் நினைவுகளின் உணர்வு நினைப்புகள்;

அவள் : (மனத்துக்குள் எதிரிலிருக்கும் அவனைப் பார்த்து) இறந்திருப்பார் என்று எண்ணி ஏமாறினேன். பிறந்தவர் போல இருக்கிறார். நிலத்தடியில் புதைந்து கிடந்த விதை என்றைக்கும் மழை பெய்தால் முளைக்கும். அதுபோன்றதே காதல் எண்ணங்கள். அத்தான் என்று நான் அன்பாய் அழைத்தபோது இன்பமே என்று என்னை அணைத்து மூத்தினார். மறவேன் உன்னை என்று மன உறுதியோடு கூறினார். எதிரில் இருக்கிறார். என்ன வெல்லாமோ நினைப்பார். என் செய்வது பேச முடியாதே. என்னைக் கைவிடாதீர்கள் எனக் கேட்டது நான்தான். காலைச் சுற்றிய பாம்பைப் போல அவரைக் கடித்துவிட்டேன். தென்னந்தோப்பில் தென்றலில் ஆடினேம். அப்போது (அவன் கிள்ளிய தழும்பைப் பார்க்கிறாள்) அவர் கிள்ளியது கூட அழியாமல் இருக்கிறது. சகுந்தலையின் கதையைக் கூறியதும் நினைவிற்காக (கழுத்தணியைக் கையால் தொட்டு) இந்த அணியை அணிவித்தார். அஃது இருக்கிறது. ஆனால் என் காதல் மழுங்கியதே (கண்ணீர் பிதுங்குகிறது, குழந்தை அழ) அட, நீ வேறு அழுகிறாயா? (பால் கொடுக்கிறாள். சிந்தனை கலைகிறது.)

அவன் : (மனத்திற்குள்) காதலுக்கு எத்தனையோ விளத்தங்களைக் கூறிய பாவலர்கள், அதைக் காக்க ஒருவழியும் சொல்லவில்லை. இன்பத்தை அவள் பொங்கலாக ஊட்டினாள். அஃது என் குருதியில் அனலாக ஓடுகிறதே. உடைந்த சங்கை ஒட்ட வைத்துக் கொண்டு ஊதிக்கொண்டிருக்கிறாள். காதலை அழிப்பது சாதி, சமயம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர அதை ஒழிக்க எவராலும் முடியவில்லை. இந்த வண்டியில் வந்து ஏறுவேனோ? அவள் இருப்பது தெரியாமல் இங்கு வந்து தொலைந்தேன். அவள்தானா என்ற ஐயத்தையும் நான் அவளுக்கு அணிவித்த தங்க அணியை எடுத்துவேறு காட்டி நான்தான் அவள் எனக் காட்டிவிட்டாள். என்ன செய்வது? கட்டிய கணவன் இங்குதான் இருப்பான். அவன் கொடுத்த கனி கையில். பேச முடியாதே.

(காட்சி மாற்றம்)

காட்சி—4

உறுப்பினர் : அவள், அவன்.
இடம் : மாமரச் சோலை.
காலம் : மாலை
நிலை : பழம் நினைவுகளின் காட்சிகள்.

(இருவரும் கைகோத்து மாஞ்சோலையில் நடந்துகொண்டே)

அவள் : அத்தான்! இந்த மாமரச்சோலையில் மரங்களில் காய்த்துக் கிடக்கும் கொத்து மாங்காய்களைப் பாருங்கள்.

அவன் : பார்த்தேன்.

அவள் : எனக்கொரு மாங்காய் வேண்டும்,

அவன் : ஒன்று வேண்டும் (கல்லால் அடிக்கிறான்) பொறுக்கிக் கொள் (பல மாங்காய்கள் தரையில் விழ)

அவள் : (ஓடி ஓடிப் பொறுக்குகிறாள்)

அவன் : (காய்களை பொறுக்குகிறான்)

(இருவர் தலைகளும் முட்டுகின்றன)

அவள் : (என்னத்தான், முட்டுகிறீர்களே, தலைவலிக்காதா?

அவன் : இரும்புத் துண்டைக் காந்தம் இருக்கும் இடத்தில் வைத்தால் இழுக்கும் அல்லவா? (இருவரும் சிரித்து அமருகின்றனர்)

அவள் : அத்தான்!

அவன் : என்ன?

அவள் : (கையை நீட்டி) அ'து என்ன?

அவன் : மல்லிகைச் செடிகள். ஓ. மல்லிகை வேண்டுமா? இந்தப் பெண்களே இப்படித்தான், காதலன் கிடைத்து விட்டானா? அது வேண்டும். இது வேண்டும் என்று கேட்டுப் பிய்த்து எடுத்து விடுவீர்களே. எந்தப் பெண்ணாவது திருக்குறள் வேண்டும்; அகம் புறம் பேசும் நூல்கள் வேண்டுமென்று கேட்பது உண்டா? பூ வேண்டும், பொட்டு வேண்டும். நகை வேண்டும், பட்டு வேண்டும். ங், சரி, இரு நான் போய் களவாடிவிட்டு வருகிறேன்;

அவள் : களவா?

அவன் : பின்ன என்ன? எவன் தோட்டமோ? அதை அவனிடம் கேட்காமல் போய்ப் பறித்து வந்தால் அது களவு இல்லாமல் என்ன? காசா கொடுக்கிறோம்.

அவள் : இந்த ஆண்களே இப்படித்தான்; காதலி கிடைக்கிற வரைக்கும் அது வேண்டுமா? இது வேண்டுமா? எனக் கேட்பார்கள். காதலி கிடைத்துவிட்டால் பெரிய மெய்ப் பொருளைக் கண்ட அறிஞரைப்போலத் தத்துபித்தென்று பேசுவீர்கள்; ஏங்க உங்களுக்குத் தெரியுமா என்னையே நீங்கள் களவாடிக் கொண்டுதான் இருக்கிறீர்கள்.

அவன் : ஆமாம்; நீ மட்டும் என்னவாம்? என்னை முழுக்க முழுக்கக் களவாடி கொண்டிருக்கிறாய், அது மட்டுமா என்னைக் கைவிட்டு விடுவீர்களோ? மறந்து விடுவீர்களோ? அப்படிச் சில ஐயக் கேள்விகள். சே. பெண்களோடு பழகக் கூடாது என்று தான் நினைக்கிறேன். பழகித் தொலைக்க வேண்டியதும் இருக்கிறது.

அவள் : சரி, சரி எல்லாம் இருக்கட்டும்; போய் அந்த முல்லிகை மொக்கைப் பறித்தெடுத்துக் கொண்டு வாருங்கள்.

அவன் : சரி நான் போகிறேன், நீ இந்த இடத்தைவிட்டு நகர்ந்து விடாதே, நான் வரும் மட்டும்.

அவள் : ஏன்?

அவன் : சீதையின் கதை தெரியுந்தானே?

அவள் : அவள் இராவணனை வரவேற்ருள்; அவனுக்குப் பழமும், கிழங்கும் கொடுத்துப் பழக்கம் காட்டினுள். தமிழச்சிக்கு அந்தப் பழக்கமே தெரியாதே. நீங்க போங்க.

அவன் : (போஞன் மலரோடு வந்து) திரும்பு. இந்த மலரை நானே உன் கூந்தலில் சூட்டுகிறேன்.

அவள் : ஆமாம். அப்போதுதான் மணம் கூடக்கொஞ்சம் வீசும், என்ன அப்படித்தானே!

அவன் : அப்படியே வைத்துக்கொள். (அவளுடைய கூந்தலில் சூடி, பின் முத்துகிருன்.)

அவள் : ம், பூவைச் சூடும் அழகா இது? முத்தவா சொன்னேன்.

அவன் : உன்னிடம் கேட்டா முத்துவது.

அவள் : அத்தான்.

அவன் : என்ன?

அவள் : வந்து... வந்து. அதாவது.

அவன் : என்ன? வந்து, வந்து. அ'தாவது, இதாவது விரைவில் சொல்லித் தொலை.

அவள் : மாட்டேன் என்று சொல்லமாட்டீர்களே!

அவன் : என்ன வேண்டும், அதைச் சொல்லாமல் முதலிலேயே ஒப்பளிக்கக் கூறுகிருயா?

அவள் : அ'தாவது சொல்லட்டுமா?

அவன் : சொல் என்று சொல்லுகிறேனே!

அவள் : கேளுங்கள்! இந்த நீரோட்டத்தில் இருவரும் சேர்ந்து குளிக்கலாமா?

அவன் : இவ்வளவுதாஞ? சரி.

அவள் : (சரியென்றதும் ஓடோடி ஓடையில் இறங்குகிருள்; தண்ணீர் இழுத்துச் செல்லுகிறது.) ஐயோ அத்தான், காப்பாற்றுங்கள். தண்ணீர் இழுத்துச் செல்லுகிறது.

அவன் : (ஓடி அவளைப் பார்த்து) ஐயோ! அஞ்சாதே! (தண்ணீரில் பாய்ந்து அவளை அணைத்துத் தூக்குகிருன்)

அவள் : ஆழம் பார்க்காமல் காலைவிடாதே என்று சொன்னது எவ்வளவு உண்மை. தண்ணீரில் போய் விடப் பார்த்தேனே! அத்தான் தண்ணீரிலிருந்து மின்சாரம் எடுப்பதாய்க் கேள்விப்பட்டிருந்தேன். இப்போதுதான் அது உண்மை என்று தெரிந்தது. என் உடலில் ஏதோ மின்சாரம் மாதிரிப் பாயக் கண்டேன்.

அவன் : இது தண்ணீரிலுள்ள மின்சாரமன்று; உணர்ச்சியில் ஊறின மின்சாரம்; தண்ணீரில் உள்ள மின்சாரம் உடலில் பாய்ந்தால் ஆளைச் கொல்லும்; இந்த மின்சாரம் இன்பந்தரும். (பிடித்து முத்துகிருன்)

அவள் : நான் வந்து மிகுநேரம் ஆகிவிட்டது. இன்று போய் நாளை இதே இடத்திற்கு வாருங்கள், சந்திப்போம். (போய் விடுகிருள்).

திரை

(தொடரும்)

மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் தமிழ்க் கல்வியின் தாழ்ந்த நிலை!

புலவர். அறிவுடைநம்பி. மூலனூர்.

அறிவுக்கு ஊற்றுக் கண்ணாக இருப்பது கல்வி:

இன்றைய உலகம் அறிவியல் உலகம். அறிவு வளர்ச்சி மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அறிவு வளர்ச்சியில் அறிவியல் வளர்ச்சியில், நாமும் போட்டி போட்டாக வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு ஊற்றுக் கண்ணாக இருப்பது கல்வி. அக்கல்வியை வழங்கும் இடம் பள்ளி. உளவியல் அடிப்படையில் கற்போரின் அகவைக்கேற்ற முறையில் பாடத்திட்டம் அமைக்கப்படுகிறது. பாடத்திட்டத்தில் பலவகைப் பாடங்கள் இருக்கும். மொழிப் பாடங்கள் இரண்டு. தமிழ், ஆங்கிலம். இவை போக கணிதம், அறிவியல், நில நூல் வரலாறு, போல மேல்நிலை வகுப்புகளில் பலவகைப் பாடங்கள், வகுக்கப்பட்டுள்ளன.

அறிவு வளர்ச்சிக்கு தாய்மொழி தேவை:

இவற்றில் தாய்மொழியாகிய தமிழுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்படவேண்டும். சிறந்த அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழி வளம் தேவை. ஒருவனுடைய அறிவாற்றலுக்கு அடிப்படையாய் விளங்குவது தாய் மொழியறிவு. இவ்வறிவு பெற தாய் மொழி வழி கற்பிப்பதோடு, தாய் மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்கள், அனைவரும், மேல்நிலை அளவில் நன்கு அறிய வேண்டிய ஒன்று. மேல்நிலை வகுப்பில் கற்பவர்கள் மன வளர்ச்சி பெற்று, மொழி, இசைவுணர்வு, படைப்பாற்றல், வருங்காலத்தில் பலதுறை வல்லுநர்களாக வரக்கூடிய பக்குவ நிலையில் இருப்பவர்கள் எந்தத் துறைக்குச் செல்பவர்களாக இருந்தாலும் இவ்வகுப்பில் வளமான தாய்மொழியறிவு பெற வேண்டும். அவ்வாறு பெற தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் பெரும்பாலானவை அறிந்திருக்க வேண்டும், முகாமையானவை, ஆழமானவை அறிமுகமாவது ஆகியிருக்க வேண்டும். பத்தாம் வகுப்பு வரை சராசரியான இலக்கிய, இலக்கண அறிவுதான் பெறுகின்றனர்.

தாய்மொழிச் சிறப்பை அறிய வாய்ப்பில்லை:

இலக்கணத்தைப் பொறுத்தவரையில் நன்னூலில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் எடுத்துக் காட்டாகக் கற்பிப்பதோடு சரி. வளமான இலக்கிய அறிவு பெற இலக்கண அறிவு இன்றியமையாத ஒன்று. அதிலும், தமிழின் அடித்தளமாக ஆணிவேராக இருப்பது தொல்காப்பியம். அதைப் பத்தாம் வகுப்பும், அதற்குக் கீழுள்ள வகுப்புகளில் உள்ளவர்களும் புரிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவர்கள். கல்லூரி சென்றபின் அனைத்து நிலைகளிலும் இலக்கணம் கற்கும் ஏந்து பெற இயலாது. ஒவ்வொரு துறையிலும் அந்தந்தத் துறைக்குரிய பாடத்திட்டம் வேறு வேறாக இருக்கும் சில துறைகளில் மொழிப்

Scanned with CamScanner

பாடமே இருக்காது: எனவே, அனைவரும் இலக்கிய, இலக்கண அறிவு பெறும் களமாக அமைவது மேல்நிலையில் உள்ள இரண்டு வகுப்புகளே. அஃதாவது 11, 12 ஆகியன. இவற்றில் இந்த இரு வகுப்புகளிலும் தொல்காப்பியம் கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும். மொழியறிவு வளம் பெறவும், தமிழின் தொன்மை, வளமை, தனிச் சிறப்பு ஆகியனவற்றை அறியவும் தொல்காப்பியம் இடம் பெறவேண்டும். அதோடு பழைய கழக (சங்க) இலக்கியங்களில் தனிச் சிறப்புப் பெற்ற பாடல்களையும் பாவி(காப்பி)யங்களில் முகாமையான பகுதிகள் சுருக்கமான முறையிலாவது பாடத் திட்டத்தில் இடம் பெறவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மகன் ஒவ்வொருவனும் தனது மொழி இனத்தின் தனிச் சிறப்பை அறிய இயலும். தனது முன்னோர் பெருமைகளை இலக்கிய இலக்கணச் சிறப்புகளை அறிய இயலும்; அவ்வாறு அறிய உணர்வூட்டுவது பாடத்திட்டத்தின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

இலக்கண அறிவு பெற வாய்ப்பில்லை:

ஆனால் தற்போதைய பாடத்திட்டத்தில் மேல் நிலை வகுப்புகளில் முதலாண்டில் அஃதாவது 11.ஆம் வகுப்பில் இலக்கணமே கிடையாது. இறுதியாண்டில் செய்யுட் பகுதியின் இறுதியில் இலக்கணக் குறிப்பு என்ற அளவில் சில செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. முகாமையான இவ் வகுப்பில் தொல்காப்பியம் பற்றிய ஒரு சொல்கூடக் கிடையாது. முறையான இலக்கணம் அறிவு பெறும் ஏந்தும் இல்லை: உலகத்தால் போற்றப்படும் தமிழின் அடித்தளமாக இருக்கும்· மொழிக்கே பாதுகாப்பளிக்கும் பெட்டகமாக விளங்கி வருகின்ற, தொல்காப்பியம் அறிமுக அளவிலேனும் இடம்பெற வேண்டாமா? இலக்கணம் தேவையில்லையென்று சிலர் கூறித் திரிவதற்கு ஏற்றமாதிரியே இவ்வகுப்புப் பாடத்திட்டம் அமைந்துள்ளது. தொல்காப்பியம் பற்றியே அறியாத ஒருவன் மொழியறிவு நிலையில் எவ்வாறு இருப்பான்? இன்று மொழியறிவு மொழியுணர்வு ஆகியன மங்கி வருவதற்கு இவையெல்லாம் காரணிகளாகும்.

அனைத்து நிலைகளிலும் தமிழ் புறக்கணிக்கப்பெறுகிறது:

இன்று பள்ளிகளில் பொதுவாகவே உயர் வகுப்புகளில் தாய்மொழிப் பாடத்தையே புறக்கணித்துள்ளனர். மொழியைப் படித்து என்ன செய்வது என்று ஆசிரியர்களே சொல்லும் அவலம் தமிழகத்தில் உள்ளது. பிறமொழி அடிமைகள் ஆங்கிலத்தையே தூக்கிப் பிடிக்கின்றனர். கல்வித் துறையிலேயே தமிழை எவ்வாறெல்லாம் புறக்கணிக்க வேண்டுமோ அவ்வாறெல்லாம் செம்மையாகச் செய்து வருகின்றனர்: அதிலும் இன்று கல்வித் துறையில் உள்ள குளறு படிகள் சொல்லி மாளா: ஒரே ஆண்டில் ஏராளமான ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள். தொடக்கப் பள்ளியாசிரியர் பயிற்சிக் காலம் இரண்டாண்டுகள் என வரையறை

Scanned with CamScanner

செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்போது, பணம் அதிகமாகக் கொடுத்தால் ஈராண்டுப் பயிற்சியையும் ஓராண்டிலேயே எழுதி-விடலாமாம். மேலும், சில பயிற்சிப் பள்ளிகளில் தட்டச்சு செய்யப்பட்ட வினாத்தாள்கள் மூலம் இறுதித் தேர்வு எழுதிய-தாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியப் பணிக்கு வருபவர்களுக்குத் தகுதிகள் முகாமையன்று; முகாமையானது காசே. அனைத்து நிலைகளிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டே வருகிறது. அது திட்டமிட்டே செய்யப்படுகிறது. உயர் கல்வி நிலையில் முற்று-கவே செய்யப்படுகிறது. தமிழ் படித்துப் பட்டம் பெறுபவர்கள் இடம் கிடைத்தால் மொழியாசிரியராகப் பணி செய்யலாம். தமிழ்ப் படிப்பு அதைவிட வேறு எதற்கும் தகுதியில்லை என்ற நிலை உருவாகி விட்டது. இல்லை உருவாக்கி விட்டார்கள். இதே நிலை தொடர்ந்தால் நிலைமை என்னவாகும்? இதற்கு விடிவுதான் என்ன ?

தமிழ்! தமிழ்!! என்று மேடைகளில் கூச்சல் போடுகிறார்கள்; தமிழையே முகாமைப்படுத்தி ஆட்சிக் கட்டில் ஏறியவர்களும் உண்டு; தமிழில் பல பட்டங்கள் வாங்கிக் கொண்டு எவ்வளவோ பேர் தமிழ் முழக்கம் செய்து வருகின்றனர். ஆனால் யாரும் மேல் நிலைப் பாடத் திட்டம் போன்றவற்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முன் வருவதில்லை. இதனிடையில் ஆட்சிமுறை வேறு. ஆட்சியில் இருப்பவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்-களெல்லாம் பெரும்பாலும் மொழிப் பகைவர்களாகவே இருக்-கின்றனர். மொழி வளர்ச்சியில் ஆர்வமுடையவர்கள் கூட சில நிலைகளை அடைந்தவுடன் அவ்வாறு ஆகி விடுகின்றனர். திரு. பெருஞ்சித்திரனார் போன்ற ஒரு சிலர் கத்திக் கத்திச் சொன்னாலும், கை நோவ எழுதினாலும் யாரும் காதில் போட்டுக் கொள்வதுமில்லை: கண்கொண்டு காண்பதுமில்லை, தமிழனின் தன்மான உணர்வே அற்றுவிட்டதுபோல் தோன்றுகிறது: இழக்கக் கூடாதவையெல்லாம் இழந்தும், வயிறு நிரப்புவதை-யும், பெட்டியை நிரப்புவதையும், பதவி என்ற பெயரில் ஏதாவது ஒன்றைப் பிடிப்பதிலும்; குடுமிபிடி சண்டையாக இருக்கிறது; எங்கேயோ இருக்கின்ற அயோத்தி இங்கும் அலசப்படுகிறது. பழனியாண்டவர் சிலையை மாற்றுவதற்குப் பலத்த எதிர்ப்பு தோன்றுகிறது. இப்படியெல்லாம் செய்திகள் பரப்பப்படுகின்றன; அரசியல் கழிவு நீர்க் கால்வாயில் புரண்டு கொண்டிருப்பவற்றில் தலைமைப் பொறுப்பில் இருப்பதை யாராவது குறை கூறிவிட்-டால் உடனே பெரிய போர்க்களம் ஆகிவிடுகிறது. எத்தனையோ நகைப்பிற்குரிய கூத்தடிப்புகளுக்கெல்லாம் கோடி கோடியாகப் பொதுமக்கள் பணம் பாழாகிறது.

தேவையற்ற, பொருளற்ற செயல்களுக்கெல்லாம், போராட்டம், கண்டனம், பேருந்து எரிப்பு, கடையடைப்பு இன்னும் என்னென்னவோ நடைபெறுகின்றன: ஆனால் நமது பெருமைக்குச் சான்றாக விளங்குகின்ற, நமது அறிவின் ஊற்றுக் கண்ணாக விளங்குகின்ற தாய்மொழி புறக்கணிக்கப்படுவது பற்றி

ஏதாவது நடை பெறுகிறதா? பேச்சளவிலாவது எதிர்ப்புத் தெரிவிப்பதுண்டா? இந்த இனத்தின் கொடிய பகைவர்களைப் பற்றி யாராவது தாழ்வாகப் பேசிவிட்டால் சீறியெழுகின்ருன். தன் மொழி எப்படித் தான் சீரழிந்தாலும், அல்லது சீரழிக்கப்பட்டாலும், கவலை பெரும்பாலோர்க்கு இல்லை. இந்த மக்களின் வரிப் பணத்திலிருந்து, உலகத்தையே காக்கின்ற இறைவன் சிலைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க படை அமைக்கப்படுகிறது. ஆனால் அன்னை மொழியின் நிலை? ஏராளமான பேர்கள் படிக்கின்றனர். இருந்தும் பயனென்ன? பெரும்பாலோர் தாய்மொழியறிவு எவ்வாறு இருக்கிறது? இனப் பகைவர்களால் அழிவு ஏற்படுவதைவிட, இனம் போன்று இனமல்லாத காடையர்களாய் ஏற்படும் அழிவே பெரிதாக இருக்கிறது. தன்மான உணர்வே மரத்துப் போய் விட்டது.

இந்திமொழியின் ஆக்கத்தால், தென்மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகள் வளம் பெறுகின்றன, என்று வானொலி முழங்குகிறது. நாம் அதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். வேறு என்ன செய்ய? இந்தியால் தமிழ் நலம் பெறுகிறது. வாய் கூசாமல் சொல்கிருன். இக் கொடுமைக்குப் பகரம் யாது? கொலைகாரர்கள் கொள்ளையர்கள் எரியம் (திரவம்) வீசுபவர்கள் இந்நாட்டில் தடையின்றி உலாவி வரலாம். இந்நாட்டின் பொருளியலையே கொள்ளையிடும் வைப்பக (வங்கி)க் கொள்ளையர்களைக் கண்டு சட்டம் அறமன்றம் எல்லாம் அஞ்சுகின்றன. ஆனால் தமிழன், தமிழைப் பற்றி, தமிழினத்தைப் பற்றிப் பேசினால், காவல் நிலையம் அழைத்துச் செல்லப்படுகிருர்கள். தமிழின வீர மறவர்கள், மறத்தியர்களைப் பற்றி எழுதினால் அவ்விதழ்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. ஆனால், இதைப் பற்றி யாராவது கண்டுகொள்கிருர்களா? கிடையாது, அரசியல் சட்டத்தையே தூசாக எண்ணி மதப்பித்துப் பிடித்தலைபவர்கள் எல்லாம் தலைவர்கள். அவர்களைக் கண்டு அரசே அஞ்சுகிறது. ஆனால் இன மீட்சிக்காகப் போராடுபவர்கள் வன்முறையாளர்கள். அவர்கள் நடமாட்டம் தடைசெய்யப்படுகிறது, அவர்களைப் பற்றிப் பேசுபவர்கள், ஆதரவு கொடுப்பவர்கள் தளை செய்யப்படுகின்றனர். இதற்கு எதிர்ப்பு சிலராவது தெரிவித்தால் அவர்கள் மீது, தடா(ர்), தடா(ர்) என்று சட்டம் பாய்கிறது. இதற்கு வெகுமக்கள் என்ன செய்கிருர்கள்? ஏதாவது சிறு சலசலப்பாவதுண்டா?

இந்த இளித்தவாய்த் தமிழர்களில் (!) தலைவர்களாகச் சொல்லிக் கொள்பவர்களுக்குப், பணம், பதவி ஆகிய எலும்புத் துண்டுகளைப் போட்டு, அவர்களைத் தங்கள் காலைச் சுற்றி வாலைக் குழைக்கச் செய்து இந்த இனத்தையே அடிமைப்படுத்தி, தங்கள் ஆளுமையிலிருந்து மீண்டு உரிமை பெற்றவர்கள் ஆகிவிடாமல் இருக்க இந்த இழி பிறவிகளைக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதை மக்களில் எத்தனைப் பேர் உணர்ந்துள்ளனர்?

(தொடர்ச்சி 16-ஆம் பார்க்க)

Scanned with CamScanner

செய்து இம்மடல் வரைகின்றேன்; நூல்கள் பெறும் ஆவலில் உள்ளேன்.
—ச. இளமதி, பங்காருபேட்டை 563114.

O : 1513 : அய்யா! செயலலிதாவைச் சாடிப் பயனென்ன? அவளை நாடி ஆதரித்த பெரும்பான்மைத் தமிழர்களைத் திருத்-தவே நாம் பாடுபடவேண்டும். தேர்தலின்போது திரு. ராமதாசு, சமது 'அவர்களுக்கு நான் கடிதம் கூடப் போட்டேன்; உங்கள் பொது எதிரி கலைஞரா, கழிசடையா(செல்வியா?) எனக்கேட்டி-ருந்தேன்; திரு. வைரவன் சுட்டிக் காட்டியது போல எங்கள் ஊரிலேயே சிறப்பும் உயர்வும் பெற்ற 'தூய நெஞ்சக் கல்லூரி' யில் பயிலும் மாணவர்கள் ரசினிக்கும் கமலகாசனுக்கும் பிறந்த-நாள் கொண்டாடுகிறார்களே!

—வா. ரா. சண்முகம், திருப்பத்தூர் (வ. ஆ)

O : 1514 : அன்பார்ந்த ஐயா, வணக்கம். தென்மொழி (சு: 26: ஓ:8) வந்தது. அட்டைப் பாடல் படித்தேன்; அதுபோல் எழுதுவது மணிவிழாக் காணும் தங்களுக்கு அழகன்று. பயன் எதுவும் அதனால் விளையாது. பண்பிற் பிறழாது எந்தக் கருத்தை-யும் எழுதலாம்; அது தங்களால் ஆகக் கூடியது தானே!

—க. தமிழமல்லன், புதுச்சேரி-9.

O : 1515 : தண்டமிழ், தனித்தமிழ் ஆசிரியர் திரு. பெருஞ்-சித்திரனார் அவர்களுக்கு வணக்கம் பல. இத்திங்கள் தென்மொழி இதழ் சுவடி 26 ஓலை 8 வரப் பெற்றோம். நன்றி, மகிழ்ச்சி, செய-லலிதாவே எனும் பாட்டு மிகு நன்றாக உள்ளது. பாவில் ஆளப்-பட்டுள்ள சொற்களும் மிகு நன்று. உமது திட்பமான நெஞ்சினை மிகவும் போற்றுகின்றோம். நெஞ்சுறுதியுடன் தமிழரினத்திற்-காகப் போராடும் ஒரு சிலரில் நீரும் ஒருவர். நீடு வாழ வாழ்த்து-கின்றோம் வாழ்க!—அ. மா. வேணுகோபாலன், வெங்காலூர்-21.

O: 1516: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய செந்தமிழ்த் திரு. பாவலரேறு ஐயா அவர்களுக்குச் செழியனின் பணிவன்பு வணக்கம்!

ஐயா, தாங்கள் அறுபதாம் அகவையிலும் நம்மினத்திற்குத் தொடர்ந்து வினையாற்றி வருகின்றமை என் போன்ற இளைஞர்-களுக்குச் சரியான படிப்பினையைத் தந்து நல்ல மாற்றத்தினை விளைவிக்கும் என்று நம்புகின்றேன்; தங்களின் உழைப்பிற்கு மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்!

காளிக்கோட்டத்தில் பணிபுரியும் நான் கடந்த செப்டம்பர்த் திங்களில் புதுச்சேரி சென்றிருந்த காலை, 'பெரியார்த் தொண்டர் பாவேந்தர் நண்பர்' திரு.மூர்த்தி ஐயா அவர்களைச் சந்தித்து உரையாடினேன்:

'தமிழினம் இன்றைக்கு எழாமல் என்றைக்கு எழப் போகின்-றது? பகையை என்றைக்கு முடிக்கப் போகின்றதோ?' என்று ஏக்கமும், துயரமும் சேர்ந்திட நாங்கள் வேகும் போதெல்லாம் எங்களைத் தேற்றித் துணிவும் நம்பிக்கையும் ஊட்டும் அப்பெருந்-தகை ஒரு செய்தியைக் கூறி உளம் வருந்தினார்; அவர் கூறிய-தாவது: ''பாவேந்தர் நூற்றாண்டு நிறைவினை ஒட்டித் தமிழ்-நாடு அரசு புதுவையைச் சேர்ந்த மூவருக்கு 'பாவேந்தர் விருது' வழங்கியுள்ளது.

இவர்களில் ஒருவர் பாவேந்தருடன் பழகியவர். தமிழ்த் தொண்டாற்றி வருபவர்; இவருக்குத் தந்தது சரி. ஆயின் மற்ற இருவருக்குந் தந்தது சரியில்லை. ஏனெனில் அவர்களில் ஒருவர் பாவேந்தரின் கொள்கைகளுக்கு எதிராய் நிற்பவர்; மத-வெறியர்! மற்றவர் பாவேந்தரால் ஒதுக்கப்பட்டவர். இவ்வாறு

Scanned with CamScanner

பாவேந்தரின் பெயரால் வழங்கப் பெற்ற விருதுகள் தமிழின எதிரிகளுக்கு போய்ச் சேர்வதைப் பொறுக்க இயலவில்லை'' எனத் திரு. மூர்த்தி ஐயா சொல்லித் துன்புற்றார்.

அன்பின் ஐயா, நீங்கள் பாவேந்தருடன் பழகியவராதலாலும், அவரின் நெஞ்சம் அறிந்தவராதலாலும் முதாமையாக இன்றைக்குத் தமிழுக்கும் தமிழனுக்கும் எதிராக எது எங்கே நடப்பினும், முதல் எச்சரிக்கை கொடுக்கும் மரபினராதலாலும் இச் செய்தியைத் தங்களின் பார்வைக்கு வைக்க முற்பட்டேன்.

அன்புவளரி

—செழியன், "தமிழினத் தொண்டியக்க" அன்பர்களில் ஒருவன், காளிக்கோட்டம் (கல்கத்தா).

O: 1517: தமிழ் போற்றி வாழும், என் இன ஐயா அவர்கட்கு வணக்கத்துடன் எழுதிக் கொள்வது!

எனது தமிழ்ப் பணியைத் துவங்குவதற்காக மாணவர் பருவத்திலேயே தங்களை நேராக கண்டு வாழ்த்துப் பெற்றேன். தாங்கள் எனது கல்லூரியில் சிறப்பு விருந்தினராக வந்த போழ்து, அக்கல்லூரியின் மாணவச் செயலர் என்ற தகுதியில் இருந்ததால், தங்களை வரவேற்கும் வாய்ப்பை பெற்றவன், நான். அதை நினைந்து நாள்தோறும் அகம் மகிழ்ந்தேன்.

கடுமையான அரசியல் கண்காணிப்பிலும் என் கன்னித் தமிழை வளர்க்க அயராது உழைக்கும் என் இனிய ஐயா அவர்களே! நான் 'தென்மொழி' இதழைக் கடந்த ஓராண்டுக் காலமாகப் பெற்றுப் படித்துப் பயன்பட்ட நிலையில் இருக்கிறேன். செயலிழந்த' நிலையில் கிடக்கும் தமிழனின் குருதியில் செந்தமிழ் எனும் மருந்தினை ஏற்றிச் சீர்தூக்க வைக்கும் தங்கள் தலை என்றும் அடிபணியாது, கயவர்கட்கு. எங்கள் கல்லூரி மாணவர்கள், கல்வியினை முடித்த சூழலிலும் அனைவரும் தென்மொழி இதழின் உறுப்பினர்களாக உள்ளோம். தென்மொழி எனும் குழவி தாயாகிய உங்கள் உடலில் இருந்து பிறந்து அந்தக் குழவியைச் சீராட்ட எங்களின் கைகள் அனைத்தும் ஒன்றுபடும் போழ்தெல்லாம் தென்மொழி போன்ற மற்ற குழவிகளாகிய நாங்கள் நாளும் நாளும் நினைந்து அகம் மகிழ்வதுண்டு. இருப்பினும், பத்துத் திங்கள் என உறுதிப் படுத்தப்பட்டதுபோல் மாதம் ஒருமுறை தானே உமது குழவிக்கு அகவை உயர்வு. பின்பு ஏன், காலத் தாழ்த்தம்? காரணம் கேட்கவில்லை. எங்களது கைகளில் அந்தக் குழவியைத் தவழவிடக் காலம் தாழ்த்தாதீர்கள்.

தாயை இழந்த சேயாக—காலம் தாழ்த்தி வரும் என்மொழியாம் தென்மொழிக்காகக் காத்து நிற்கிறேன். என் கல்லூரியின் பெயர் 'கணேசர் செந்தமிழ்க் கல்லூரி' திருமிகு பாவாணன் அவர்களது உதவியால் நாங்கள் தங்களைக் காணும் பேறு பெற்றதும், மேலும் தங்களுடன் கலந்து பேசியதுமான அந்த நாட்களை நினைவு கூறும் போழ்தெல்லாம் எனக்குள் ஓர் இன்பம்.

தங்களுடன் சேர்ந்து எடுத்த புகைப் படங்களைக் காணும் போழ்தெல்லாம் தங்களை மீண்டும் ஒரு முறை காண வேண்டும் என்ற அவா! என்றென்றும் தமிழ் காக்கத் தலை கொடுப்பேன் என்ற உறுதியுடன். —சி. பிரகலாதன், மனோத்தமிழன்-கம்பம்.

O: 1518: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா வணக்கம்! தமிழ் மகிழ்நன் எழுதுகிறேன். தங்களின் உடல் நலமா? உடல்

(தொடர்ச்சி உள்ளே 14-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)